2021 - இதழ் 01

இலவசம்

## தை - 2021

# உள்ளான மனிதன்

## மென்பிரதி

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH

gtachurch.ca

# அன்பான வாசகர்களுக்கு!

**“உள்ளான மனிதன்”** மாதாந்தர சஞ்சிகை வெளியீட்டை ஆரம் பித்து, கடந்த மாதத்துடன், **ஏழு (7) வருடங்களை**, பூர்த்தி செய்தி ருக்கின்றோம். இது தேவனுடைய ஈவு!

இந்த சஞ்சிகையிலே தரப்பட்டுள்ள, புதிய நாளுக்குள் அனுதின தியானக் குறிப்புக்கள், **ஒலிப்பதிவு செய்யப்பட்டு**, எங்கள் இணைய த்தளத்தில் பதிவேற்றப்பட்டிருக்கின்றது என்பதை உங்களுக்கு தெரிவிக்கிறோம். தியானக் குறிப்புக்களின் **ஒலிப்பதிவை கேட்ப தற்கு,** எங்கள் இணையத்தளத்தில், தியானப் பக்கத்தை (DAILY DEVOTIONS) தெரிவு செய்யுங்கள்.

உள்ளான மனிதன் சஞ்சிகை **இலங்கையிலும்** புத்தக வடிவிலே அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. மேலும், **அமெரி க்கா, ஐரோப்பியா, அவுஸ்ரேலியா** கண்டங்களிலுமுள்ள நாடுகளி லும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. உங்கள் உறவினர் நண்ப ர்கள் அதை பெற்றுக் கொள்ள விரும்பினால், அவர்களின் முகவரியை மின்-அஞ்சல் ஊடாகவோ, அல்லது தொலைபேசி ஊடாகவோ எங்களுக்குத் தெரியப்படுத்தலாம். அல்லது இந்தப் புத்தகத்தின் கடைசிப் பக்கத்திலுள்ள விண்ணப்பப் படிவத்தில் உங்கள் விப ரங்களை பதிவுசெய்து, எங்கள் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

அனுதின தியானத்தை, **whatsapp, Viber** வாயிலாக பெற்றுக் கொள்ள விரும்பினால், உங்கள் கைதொலைபேசி இலக்கத்தை எங் கள் சபையின் இணையத்தளத்தின் (gtachurch.ca/contact) வாயி லாகவோ அல்லது சபையின் தொலைபேசி வாயிலாகவோ எங்களு க்குத் தெரியப்படுத்துங்கள். மேலும், **FACEBOOK YOUTUBE, ALEXA, GOOGLE ASSISTANT, PODCAST** வாயிலாகவும் தியா னக் குறிப்புக்களை வாசிக்கலாம்.

சகலமும் படைத்த சர்வ வல்லமையுள்ள தேவனின் ஜீவ வார்த் தைகளை அனுதினமும் வாசித்து தியானியுங்கள். தேவனை அறி கின்ற அறிவிலே வளருங்கள்! உங்களைக் குறித்ததான பிதாவா கிய தேவனின் சித்தத்தை இந்த பூமியிலே நிறைவேற்றுங்கள்! நித்திய இன்ப வாழ்வை பரலோகில் பெற்றுக் கொள்ளுங்கள்.

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909** gtachurch.ca

# உள்ளான மனிதன்

மாதாந்தர சஞ்சிகை - இலவசம் 2021 - இதழ் 01

## ஆண்டவர் இயேசு சொன்னார்:

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

உள்ளூர் சபையின் தொடர்புகளுக்கு

நீங்கள் தற்போது கிறிஸ்தவ **ஆவிக்குரிய** ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

## 2021 - இதழ் 01


பக்கம் **5**

### கர்த்தர் என் மீட்பராய் இருக்கின்றார்

நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன், திகையாதே, நான் உன் தேவன், நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன், என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்

பக்கம் **7**

### பொறுமையோடு முன்னேறுங்கள்

ஆம் பிரியமானவர்களே, நம் தேவனாகிய கர்த்தர் மிகு ந்தமனதுருக்கமுடையவர். மனிதர்கள் அழிந்து போவது அவருடைய சித்தம் அல்ல. எனவே மனித ர்கள் யாவ ரும் மனந்திரும்பும்படி நீடிய பொறுமையயுள்ளவராக இருக்கின்றார்

பக்கம் **14**

### பிரசங்கக் குறிப்புகள்

முதலாவதாக, எனக்கு ஆலோசனை கூறும் இவர் யார்? இவர் உண்மையாகவே தேவனுடையவரா? தேவனுடைய நாமத்தை பிரஸ்தாபப்படுத்துகின்றவரா? என்பதை ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள்.

பக்கம் **16**

### புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.


**கிரேஸ் (ற்)ரபனக்கல்**


**PLACE OF WORSHIP**
210 Silver Star Blvd., Unit #807
Scarborough, ON M1V 5J9, Canada

**MAILING ADDRESS**
7700 Markham Road, P.O. Box 3052
Markham, ON L3S 4T1, Canada

☎ 416.613.2909

gtachurch.ca/contact


gtachurch.ca

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

## தலைப்பு அகராதி 16ம் பக்கத்திலிருந்து...


**மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்**

... தை 6, 8, 9, 12, 13, 16, 27, 29, 30, 31

**போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி**

... தை 3, 5, 6, 7, 8, 12, 13, 16, 18, 20, 21, 26, 27

**பாவத்திலிருந்து விடுதலையடையும் வழி உண்டு**

... தை 1, 4, 6, 8, 9, 12, 17, 20, 21, 26, 28

**முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்**

... தை 5, 7, 8, 12, 14, 15, 16, 18, 20, 21, 26, 27, 28

**சமரசமான வாழ்க்கை வேண்டாம்**

... தை 3, 4, 5, 14, 15, 16, 17, 21, 23, 24, 26, 28

**தெய்வீக ஆசீர்வாதங்கள்**

... தை 2, 6, 9, 10, 11, 18, 22, 29, 30, 31

**தேவனுடைய சித்தம் நிறைவேறட்டும்**

... தை 1, 7, 10, 11, 14, 15, 19, 25, 27

**தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை**

... தை 1, 3, 4, 11, 14, 18, 19, 22, 25, 26, 29

**சமாதானமும் அமரிக்கையுமான வாழ்க்கை உண்டு**

... தை 1, 10, 13, 30, 31

**பொறுமையோடு காத்திருங்கள்**

... தை 6, 13, 16, 30

**தேவ நீதி வெளிப்படும்**

... தை 8, 12, 24, 25, 27

**திவ்விய சுபாவங்கள் வெளிப்படட்டும்**

... தை 2, 10, 11, 18, 19, 20, 21, 22, 26

**வாழ்வு தரும் திருவசனம், ஐக்கியத்தின் மேன்மை**

... தை 4, 7, 8, 9, 13, 15, 17, 19, 20, 22, 23

**மேட்டிமை, வன்மம், பகை தலைதூக்கும் போது...**

... தை 2, 19, 20, 21, 26, 27


gtachurch.ca

# கர்த்தர் என் மீட்பராய் இருக்கிறார்

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

கர்த்தர் என் மீட்பராய் இருக்கிறார் என்ற சங்கீதமானது மிகவும் பிரபல மானதோர் சங்கீதமாகும்.

அடக்க ஆராதனைகளிலே இதை எப்போதும் பாடுவார்கள். ஓர் அடக்க ஆராதனைக்குச் சென்றிருந்தேன். அங்கு இப்பாடலை மிக அழகாகப் பாடி னார்கள். அப்போது எனதருகில் இருந்தவர் அப்பாடலைக் கேட்டு, எத்தனை அழகான பாடல் ஏன் இதை மரணவீட்டில் அதிகமாய்ப் பாடுகிறார்கள் என்றார். உண்மையிலே இப்பாடல் மிகவும் அழகானதும் ஆறுதலையும் நம்பிக்கையை தருகின்றதான வசனங்களைக் கொண்டுள்ளது. மரணம் என்பது மனிதருக்கு மிகவும் குறுகிய நேரத்தில் மிகப்பெரிதான நோவை ஏற்படுத்தும் நிகழ்வாயுள்ளது. அங்கு இவ்வார்த்தைகள் மிகுந்த ஆறுதலைக் கொடுக்கின்றன. அதினாலே அங்கு இப்பாடலை எப்போதும் பாடுகின்றா ர்கள்.

தாவீது இராஜா தனது வாழ்க்கையிலேயே இப்பாடலைப் பாடினார். இப்புதிய வருடத்தை நாம் ஆரம்பிக்கும் போது, பலவிதமான நிச்சயமற்ற நிலைமை கள் உலகத்தைச் சூழ்ந்து நெருக்கி நிற்கின்றது. புதிய வருடம் ஆரம்பிக்கும் போது இவ்வருடத்திற்கான வாக்குத்தத்தம் என்ன என்று கேட்பவர்களுண்டு.

தேவனுடைய பிள்ளைகளுக்கு தேவனின் வாக்குத்தத்தங்கள் யாவும் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கின்றது. ஒரு வாக்குத்தத்தமல்ல எல்லா வாக்குத்தத்தங்களும் உங்களுடையதே. தனது ஜீவனையே எமக்காக ஈந்தவர் மற்ற நன்மைகளையும், வாக்குத்தத்தங்க ளையும் எமக்கு விலக்குவாரோ? அவர் நிச்சயமாக ஆசீர்வதிக்கின்றவ ராகவே இருக்கின்றார்.

வாழ்க்கையிலே சவால்கள் எப்போதுமே நமக்கு வருவதுண்டு. ஆனால் தேவனின் வாக்குத்தத்தமோ அவை எல்லாவற்றிலும் பெரிதானதாய் எங் கள் சார்பிலுள்ளது.

**“நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன், திகையாதே, நான் உன் தேவன், நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாய ம் பண்ணுவேன், என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்.”**

என்று இஸ்ரவேலுக்கு வாக்குரைத்தவர் உங்களுடனேயிருந்து உங்களை ஆசீர்வதிப்பாராக.

**ஆகையால் தைரியங்கொண்டு தாவீதை போன்று அறிக்கையிடுவோம்.**

## சங்கீதம் 23

“கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், நான் தாழ்ச்சியடையேன்.

அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்.

அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.

நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன், தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர், உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.

என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர், என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.

என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும், நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.”

இம்மட்டும் காத்தவர் எபிநேசர், இம்மானுவேலராய் எம்முடனே கூட இருக்கின்றார். பரிசுத்த பவுல் தெசலோனிகேயருக்கு எழுதின நிருபத்தில் குறிப்பிட்டுள்ளபடி,

**“எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள். அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது.”** 1 தெச 5:16-18

பிரியமான சகோதரனே சகோதரியே,

சகலவிதமான ஆறுதல்களின் தேவன் இப்புதிய வருடத்தில் உங்களை ஆசீர்வதித்துக் காத்துக்கொள்வாராக.

எம்மோடு கூட ஜெபிக்க விரும்பினால் ஞாயிறு காலை 10:00 மணிக்கு நேரலையில் **www.gtachurch.ca/live** இணையதளத்தின் வழியாக தேவ ஆராதனையில் கலந்து கொள்ளும்படி உங்களை அழைக்கின்றேன்.

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

gtachurch.ca

# பொறுமையோடு முன்னேறுங்கள்

இந்த உலகிலே நடைபெறுகின்ற அநியாயங்களையும் அக்கிரமங்களையும் பார்க்கும் போது, தேவன் இருக்கின்றார் என்ற நம்பிக்கை எனக்கில்லை. நாள்தோறும் எத்தனையோ ஏழைகள் எளியவர்கள் ஒடுக்கப்படுகின்றார்கள், நியாயம் நீதிக்கு இடமில்லை என்று ஒரு ஊரில் வாழ்ந்து வந்த மனிதன் அவ்வப்போது கூறிக்கொள்வான். அந்த மனிதன், இந்த உலகமுறைமையின்படி கல்வி கற்றவனும்,செல்வமுடையவனுமாக வாழ்ந்து வந்ததால், அவனுடைய தத்துவப் பேச்சுக்களானது அவ்வப்போது அவ்வூரில் வாழ்ந்து வந்த சிலரை கவர்ந்து கொண்டது. அவனுடைய தத்துவப் பேச்சினால் சிலர் இழுப்புண்டு போனார்கள். தேவ நம்பிக்கையானது தன் வாழ்வில் தனது சுயநீதியை நிறைவேற்ற இடையூறுள்ளதாக இருந்ததால், தேவனில்லை என்று கூறிவிடுவது அவன் கொள்கைகளுக்கும் அவனது வாழ்க்கை முறைமைக்கும் மிகவும் ஏற்புடையதாக இருந்தது.

ஒரு நாள் அவ்வூரிலுள்ள பலர், தம் ஊரில் ஒரு நூலகத்தை அமைப்பதைப் பற்றி கலந்தாலோசிப்பதற்காக அவ்வூரிலிருந்த சனசமூக நிலையத்தில் ஒன்றுகூடினார்கள். நூலகத்தை குறித்த தங்கள் அபிப்பிராயங்களை சிலர் தெரிவித்தார்கள். அவ்வேளையிலே, தேவ நம்பிக்கையற்ற அந்த மனிதன், தேவ நம்பிக்கை பிரயோஜனமற்றது. ஊரில் எத்தனை ஏழை எளியவர்கள் துன்பப்படுகின்றார்கள் வந்து பாருங்கள் என்று தன்னுடைய சித்தாந்தங்களையும், தத்துவங்களையும் பற்றி மறுபடியும் பேச ஆரம்பித்துவிட்டான். அவன் அந்த ஊரில் கனம் பெற்றவனும், ஊரின் செயற்திட்டங்களுக்கு கணிசமான அன்பளிப்பு செய்கின்றவனுமாக இருந்ததால், அவனை எதிர்த்து பேசுவதற்கு எவரும் துணியவில்லை.

அந்த இடத்திலே வந்திருந்த ஒரு வயதான போதகர், அந்த மனிதனை நோக்கி: பெரியவரே, நீங்கள் இப்படியாக ஏழைகள் கஷ்டப்படுவதையும், எளியவர்கள் ஒடுக்கப்படுவதயைும், பற்றி அடிக்கடி பேசிக் கொண்டிருக்கின்றீர்கள். கடந்த வருடத்திலே, உங்களுடைய இரண்டாவது மகனானவன், மதுபானம் அருந்திய பின்பு, நாட்டின் நெடுஞ்சாலை விதிகளை மீறி, தன்னுடைய மோட்டார் வண்டியை அதி வேகமாக ஓட்டிச் சென்றதால், அடுத்த வீதியிலே, வழியோரமாக சென்று கொண்டிருந்த ஏழ்மையான குடிமக்களை மோதினான். அவர்களில் ஒருவன் இன்னும் படுக்கையிலே கிடக்கின்றான். இன்னுமொருவன் தன் கால் ஒன்றை இழந்து போனான். மற்றவர்கள் படுகாயங்களுடன் உயிர் தப்பினார்கள். அந்த விபரீதத்திற்கு யார் காரணம்? பரலோகத்திலிருக்கும் தேவனா? நாட்டின் சட்டமா? அல்லது அதை மீறிய உங்கள் மகனா? என்று கேட்டார். பலர் முன்னிலையில் போதகர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த அந்த மனிதனுக்கு மறுமொழி சொல்லிக் கொள்ள முடியவில்லை.

வயதான போதகர் மேலும் கூறுகையில்: பெரியவரே பலர் முன்னிலையிலே நான் உங்களை அவமதிக்கும்படியாக இவற்றை கூறவில்லை ஆனால் மனித குலத்தின் அவல நிலைக்கு யார் காரணம் என்பதை நீங்களும் இவ்வூராரும் திட்டமாக அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்கா

கவே நான் இதைக் கூறுகின்றேன். இப்படிப்பட்ட பெரிதான விபத்திற்கு பின்னரும், உங்கள் மகனுடைய சாரதி அனுமதிப்பத்திரம் (வண்டியை ஓட்டுவதற்கான லைசன்ஸ்) இரத்துச் செய்யப்படவில்லை. சிலவேளைகளிலே, இப்போதும்கூட உங்கள் மகனானவன் அதிவேகமாக வாகனத்தை ஓட்டிச் செல்வதை நாங்கள் காண்கின்றோம். நீங்கள் ஏன் அவனை தடுத்து நிறுத்துவதில்லை? ஏன் தண்டிப்ப தில்லை? என்று கேட்டார்.

தேவ நம்பிக்கையற்ற மனிதன்: அவன் இன்னும் விபரமறியாத இளைஞன். வாழ்க்கையில் நடந்த ஒரு குற்றத்திற்காக அவனை சிறையிலிடுவதும், கடுமையான தண்டனையைக் கொடுப்பதும் நல்லதல்ல. அவனுக்கு இன்னுமொரு சந்தர்ப்பத்தை கொடுக்க வேண்டும். அவன் உணர்வடையும் காலம் உண்டு. அதுவரை அவன் வருத்தப்படுவதையோ சஞ்சலப்படுவதையோ நான் விரும்பவில்லை என்று கூறினார்.

வயதான போதர்: பெரியவரே, நன்றாக மறுமொழி கூறினீர்கள். அந்த இளைஞனைப் போல உலகிலேயுள்ள சிறியவர்கள், பெரியவர்கள், வயதானவர்கள் பலவிதமான அநியாயங்களையும் அநீதியான காரியங்களையும் நடப்பித்து வருகின்றார்கள். ஒரு சொல்லாலே, அநியாயம் செய்கின்றவர்களை அழித்துப் போடுவது, பரலோகத்திலிருக்கின்ற தேவனுக்கு இலேசான காரியம். அப்படியாக, ஒவ்வொரு மனிதன் செய்யும் குற்றத்திற்குத் தக்கதாக, தேவனாகிய கர்த்தர் உடனடியாக சரிக்கட்டுவாராக இருந்தால் இந்த பூமியிலே ஒரு மனிதனும் அவருடைய நீதிக்கும் பரிசுத்தத்திற்கும் முன் நிற்க முடியாது. யாவரும் நிர்மூலமாகியிருப்பார்கள். (புல ம்பல் 3:22, சங்கீதம் 103:10). தம்முடைய சர்வவல்லமையை மனித குலத்தின் மேல் காட்டாமல், ஒருவரும் தங்கள் அநியாயத்திலே அழிந்து போகாதபடிக்கு யாவரும் மனந்திரும்பி நீதிமான்களாக மாற வேண்டும் என்று தம்முடைய உன்னத அன்பைப் பொழிகின்றார். அது மட்டுமல்ல, தங்கள் அறியாமையிலே “தேவன் இல்லை” என்று கூறிக் கொள்கின்றவர்களும் மனந்திரும்பி, நித்திய வாழ்வை பரலோகிலே பெற்றுக் கொள்ள வேண்டும் என அவர்கள்மேல் நீடிய பொறுமையுள்ளவராக இருந்து, கிருபையின் நாட்களை கூட்டிக் கொடுக்கின்றார் என்றார்.

அதுமட்டுமல்லாமல், விபத்திலே மாட்டிக் கொண்ட அந்த ஏழை எளியவர்கள் வாழ்வாதாரம் அற்றவர்களாய் தங்கள் அன்றாட பிழைப்பிற்காக அதிகமாக வருத்தப்படுகின்றார்கள். அவர்களில் சிலரோ வேலை செய்ய முடியாதபடிக்கு அங்கவீனமுற்றிருக்கின்றார்கள். அவர்களுக்குரிய நஷ்ட ஈடுகள் எதுவும் நீதியாக செலுத்தப்படவில்லை. அவர்களுக்காக பேசுவதற்கு இந்த ஊரிலே யாரும் துணிவதில்லை. ஆனால் இவ்வுலகிலே துயரப்படுபவர்கள் எல்லோருமே தேற்றப்படும் ஒரு நாள் உண்டு. அந்நாளிலே அவர்கள் மகிழ்ச்சியாய் இருப்பார்கள் என்று பதில் கூறினார்.

தேவனை அறியாத அந்த மனிதன், சுயநீதியுள்ளவனாக இருந்தும், தன் பிள்ளையின் எதிர்காலத்தைக் குறித்து அவன் கொண்டிருக்கும் கரிசனையைப் பாருங்கள். இந்தப் பூவுலகிலே, மனிதர்கள் செல்வந்தர்களாகவோ அல்லது தங்கள் மாதாந்திர ஊதியத்தின் அடிப்படையில் வாழ்கின்றவர்களாகவோ அல்லது நாளாந்த கூலிகளாகவோ இருகின்றார்கள். இன்னும் சிலர் வறுமைக் கோட்டின் கீழ் தங்கள் நாளாந்த அடிப்படைத் தேவைகளை சந்திப்பதற்கு மிகவும் கஷ்ப்பட்டுவருகின்றார்கள். பொருளா

தார நிலைமை எப்படியாக இருந்தாலும், அவர்கள் சன்மார்க்கமான வாழ்க்கை வாழ்ந்தாலும், துன்மார்க்கமான வாழ்க்கை வாழ்ந்தாலும், தங்களிடமிருக்கும் நிர்வாகத்தின் அளவின்படி, பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு எப்போதும் சிறந்ததை கொடுக்க வேண்டும் என்று உழைக்கின்றார்கள்.

“உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக்கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள் ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?” என்று ஆண்டவர் இயேசு கூறியிருக்கின்றார்.

இந்த உலகிலே ஒரு சாரார் தேவன் இல்லை என்று கூறிக் கொள்கின்றார்கள். “தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான்” என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. (சங்கீதம் 14:1, 53:1). மதிகேடன் என்று கூறும் போது, இந்த உலக முறைமையின்படி கல்லாதவர்கள் என்பது பொருள் அல்ல. ஒரு வேளை அவர்கள் இந்த உலக முறைமையின்படி கற்றுத் தேறியவர்களாக இருக்கலாம் அல்லது ஒருவேளை இந்த உலக முறைமையின்படி கல்லாதவர்களாக்கூட இருக்கலாம். எப்படியிருப்பினும், அவர்களுடைய மனக்கண்கள் குருடுபட்டிருப்பதால், இவர்கள் இருளிலே தடுமாறுகின்றார்கள். இவர்கள் உலகத்திலே பெரிய ஞானிகளாக இருந்தாலும், மனதிலே தேவ பயம் இல்லாததால், தேவ ஞானம் (மெய்ஞானம்) இவர்களுக்கு வெகுதூரமாக இருக்கின்றது. தமக்குப் பயந்து அவருடைய வழியிலே நடக்கின்றவர்களுக்கு தேவனாகிய கர்த்தர்தாமே தமது மெய்ஞானத்தை கொடுக்கின்றார். தேவ ஞானத்தைப் பெற்றவர்கள், ஒருவேளை, இந்த உலக முறைமையின்படி ஏழைகளாக இருந்தாலும் கூட, அவர்கள் தேவனைக் குறித்த விசுவாசத்திலே ஐசுவரியவான்களாக இருக்கின்றார்கள். அவர்கள் மனக் கண்கள் வெளிச்சமாக இருப்பதால் நித்தியமானவைகளை நாடித் தேடுகின்றார்கள். (யோவான் 3:17-21, மத்தேயு 11:24-25)

மீட்பராகிய இயேசு கிறிஸ்து மாம்சத்தின்படி இஸ்ரவேலர் என்று கூறுபவர்களுக்கு மாத்திரமல்ல, எங்களுக்காக மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கின்ற பலியாக தம்மை ஒப்புக் கொடுத்தார். (1 யோவான 2:2). இந்த உலகத்திலே, இயேசுவினால் மீட்கப்பட்டவர்களும், இன்னும் இயேசுவினால் மீட்பை பெறாத சன்மார்க்கரும் (நல்வழி வாழ வேண்டும் என்று விரும்புகின்றவர்கள்) துன்மார்க்கரும், தேவன் இல்லை என்கின்ற மதிகேடரும் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் யாவரும் மீட்பைப் பெற்றுக் கொள்ளும்படிக்கு இயேசு தம்மை ஒப்புக் கொடுத்திருக்கின்றார். அதாவது, விலைறேப்பெற்ற ஒரு அன்பளிப்பு பொருளானது, அழகாக பொதியிலே இடப்பட்டு, ஒவ்வொரு மனிதர்களுக்கும் இலவசமாக கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த அன்பளிப்பை ஒருவன் தன் சொந்த தீர்மானத்தின்படி ஏற்றுக் கொண்டால் அது அவனுக்குரியதாகும். ஒருவன் தன் சொந்த தீர்மானத்தின்படி அதை ஏற்றுக் கொள்ள மறுத்தால் அது அவனுக்குரியதல்ல. விலைமதிக்க முடியாத தம்முடைய திரு இரத்தத்தினால் உண்டான மீட்பை, கர்த்தராகிய இயேசு

யாவருக்கும் இலவசமாக கொடுக்கின்றார். அதை ஏற்றுக் கொள்பவன் அதனால் நித்திய வாழ்வை அடைந்து கொள்கின்றான். அதை ஏற்க மறுக்கின்றவன் தன் வாழ்வை நித்திய அழிவிற்கு ஒப்புக் கொடுப்பதால் அவன் மதிகேடனாகவே இருக்கின்றான்.

## ஒருவரும் கெட்டுப் போகாமல் பாவத்திலிருந்து மீட்பை பெற்றுக் கொள்ளும்படிக்கு தேவன் நீடிய பொறுமையுள்ளவராக இருக்கின்றார்.

நினிவே என்னும் நகரத்தின் அக்கிரமங்கள் அதிகமாகயிருந்ததால், கர்த்தர் தம்முடைய ஊழியராகிய யோனாவை நோக்கி: நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், நான் உனக்குக் கற்பிக்கும் வார்த்தையை அதற்கு விரோதமாய்ப் பிரசங்கி என்றார். யோனா எழுந்து, கர்த்தருடைய வார்த்தையின்படியே நினிவேக்குப் போனான். யோனா நகரத்தில் பிரவேசித்து, ஒருநாள் பிரயாணம்பண்ணி: இன்னும் நாற்பதுநாள் உண்டு அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று கூறினான். அப்பொழுது இதைக் கேள்விப்பட்ட நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசஞ்செய்யும்படிக் கூறினார்கள். பெரியோர்முதல் சிறியோர்மட்டும் இரட்டுடுத்திக்கொண்டார்கள். இந்தச் செய்தி நினிவேயின் ராஜாவுக்கு எட்டினபோது, அவன் தன் சிங்காசனத்தைவிட்டு எழுந்து, தான் உடுத்தியிருந்த உடுப்பைக் கழற்றிப்போட்டு, இரட்டை உடுத்திக் கொண்டு, சாம்பலிலே உட்கார்ந்தான். மேலும் ராஜா, தானும் தன் பிரதானிகளும் நிர்ணயம்பண்ணின கட்டளையாக, நினிவேயிலெங்கும் மனுஷரும் மிருகங்களும், மாடுகளும் ஆடுகளும் ஒன்றும் ருசிபாராதிருக்கவும், மேயாமலும் தண்ணீர் குடியாமலும் இருக்கவும், மனுஷரும் மிருகங்களும் இரட்டினால் மூடிக்கொண்டு, தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடவும், அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம்தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவுங்கடவர்கள். யாருக்குத் தெரியும் நாம் அழிந்துபோகாதபடிக்கு ஒருவேளை தேவன் மனஸ்தாபப்பட்டு, தம்முடைய உக்கிர கோபத்தைவிட்டுத் திரும்பினாலும் திரும்புவார் என்று கூறச்சொன்னான். அவர்கள் தங்கள் பொல்லாத வழியை விட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக்குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார். (யோனா 3:1-10)

தேவன் தம்முடையவர்களைக் குறித்து பொறுமையுள்ளவராகவே இருக்கின்றார். இதனிமித்தமே, தான் உரைத்த தீர்க்கதரிசனம் நிறைவேறாததைக் கண்ட யோனாவுக்கு அது மிகவும் விசனமாயிருந்தது. அவன் கடுங்கோபங்கொண்டு, கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி: ஆ கர்த்தாவே, நான் என் தேசத்தில் இருக்கும்போதே நான் இதைச் சொல்லவில்லையா? இதினிமித்தமே நான் முன்னமே தர்ஷீசுக்கு ஓடிப்போனேன் நீர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவரும், தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமான தேவனென்று அறிவேன். இப்போதும் கர்த்தாவே, என் பிராணனை என்னைவிட்டு எடுத்துக்கொள்ளும் நான் உயிரோடிருக்கிறதைப்பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ எரிச்சலாயிருக்கிறது நல்லதோ என்றார். (யோனா 2:1-4)

ஆம் பிரியமானவர்களே, தேவனாகிய கர்த்தர் மிகுந்த மனதுருக்கமுடையவர். மனிதர்கள் அழிந்து போவது அவருடைய சித்தம் அல்ல. எனவே மனிதர்கள் யாவரும் மனந்திரும்பும்படி நீடிய பொறுமையயுள்ளவராக இருக்கின்றார் (2 பேதுரு 3:9). இது தேவனுடைய கிருபையின் நாட்கள். இந்நாட்களிலே சில மனிதர்கள் துணிகரம் கொண்டு, தேவனுக்கு விரோமாக பேசி, அநீதியின் கிரியைகளை நடப்பிக்கின்றார்கள். இதனால் இன்னுமொரு சாரர் அந்த அநீதியின் விளைவாக பல துன்பங்களுக்கு இலக்காகின்றார்கள். கர்த்தருடைய பெரிதும் பிரகாசமுமான நாள் வருகின்றது. மனிதன் எதை விதைக்கின்றானோ அதை அந்நாளிலே அறுத்துக் கொள்வான். மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார் மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான் ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான் (கலாத்தியர் 6:7-8). தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் (யூதா 1:15).

## துயரப்படுகின்றவர்களை கர்த்தர் தேற்றுவார். அவர்கள் கண்ணீர் துடைக்கப்படும். அந்நாளிலே தேவனானவர் அவர்கள் மத்தியிலே வாசமாயிருந்து அவர்களோடே கூட இருப்பார். (மத்தேயு 5:4, வெளி 21:4)

ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான் அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான். லாசரு என்னும் பேர்கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான் அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, அவனுடைய மேஜையிலிருந்து விழுந் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான் நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று. பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்

ஐசுவரியவானும் மரித்து அடக்கம்பண்ணப்பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும் இந்த அக்கினிஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான். அதற்கு ஆபிரகாம்: மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அநுபவித்தான், அதை நினைத்துக்கொள் இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய். அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு

உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான். அப்பொழுது அவன்: அப்படியானால், தகப்பனே, எனக்கு ஐந்துபேர் சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும் பொருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். ஆபிரகாம் அவனை நோக்கி: அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும் என்றான். அதற்கு அவன்: அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள் என்றான். அதற்கு அவன்: அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்பமாட்டார்களென்று சொன்னான் என்று ஆண்டவர் இயேசு கூறினார். (லூக்கா 16:19-31)

## தேவ நீதியை உங்கள் வாழ்க்கையில் நடப்பிப்பதினால் நீங்கள் துன்பப்படுத்தப்பட்டால் நீங்கள் பாக்கியவான்கள்.

ஆதிச் திருச்சபையிலே, வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள். கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சை பார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக் கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள். உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள். (எபிரெயர் 11:36-39) ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். அவர் தமக்கு முன்வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். (எபிரெயர் 12:1-3)

ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள். பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்துநிற்கவில்லையே. (எபிரெயர் 12:3-4)

ஒருவேளை இன்று நீங்கள் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதிருந்தால், கொடுக்கப்பட்ட கிருபையின் நாட்களை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். இந்த உலகத்தின் வேஷம் கடந்து போகின்றது. மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது. வெளியின் புஷ்பத்தைப்போல் பூக்கிறான். காற்று அதின்மேல் வீசினவுடனே அது

இல்லாமற்போயிற்று. அது இருந்த இடமும் இனி அதை அறியாது. (சங்கீதம் 103:15-16).

## பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள். (தானியேல் 12:2)

அதாவது, இந்த பூமியிலே பிறந்த யாவரும் ஒருநாள் மரிக்கவேண்டும். அப்படியாக மரித்தவர்கள் யாவரும் தேவனுடைய நாளிலே எழுந்திருப்பார்கள். அந்நாளிலே, பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை செய்தவர்கள் நித்திய ஜீவனையும், பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை செய்யாதவர்கள் நித்திய நிந்தையையும் இகழ்ச்சியையும் (நித்திய ஆக்கினை) அடையும்படி எழுந்திருப்பார்கள்.

பிரியமானவர்களே, மீட்பராகிய இயேசு உங்களுக்கு கொடுத்த, விலை மதிக்க முடியாத அன்பளிப்பாகிய "இரட்சிப்பின் நற்செய்தியை" நீங்கள் ஏற்றிருந்தால், நீங்கள் பாக்கியம் பெற்றவர்கள். அதை இறுகப்பற்றிக் கொள்ளுங்கள். விசுவாசத்திலே நல்ல போராட்டத்தைப் போராடுங்கள். நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்ளுங்கள். உங்களுக்காக ஜீவகிரீடம் வைக்கப்பட்டிருக்கின்றது. அதை மகிமையின் நாளிலே தேவன் உங்களுக்கு தந்தருள்வார். அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார். இந்த உலகிலே, உலக தத்துவங்களின்படி வாழும் மனிதர்களின், உலகில் ஞானமென்று கருதப்படுகின்ற மதீயீனமான பேச்சுக்களால் சோர்ந்து போய்விடாதிருங்கள். வருத்தத்தோடும் மனச்சஞ்சலத்தோடும் இரண்டு கைப்பிடியும் நிறையக்கொண்டிருப்பதைப்பார்க்கிலும், அமைச்சலோடு ஒரு கைப்பிடி நிறையக் கொண்டிருப்பதே நலம். (பிரசங்கி 4:6). நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள் (கொலோசேயர் 3:1-4). எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது. மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்.

நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவர் உங்கள் ஸ்திரப்படுத்தி, திடப்படுத்தி வழிநடதிச் செல்வாராக. **ஆமேன்**!

# ஆரோக்கிய வாழ்வு

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]**

## பிரதான வாசகம் - 3 யோவான் 1:3

ஓர் நாட்டின் தேசிய தின விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றுக் கொண் டிருந்தது. நாட்டின் காவற்துறை படைகளை சேர்ந்தவர்கள், இனிமையாக இசைமீட்டு, நேர்த்தியாக அணிவகுத்துச் சென்றார்கள். அதன் பின்னர் குதிரைப் படையின் அணிவகுப்பு நடைபெறுகின்ற வேளையிலே எல்லா குதிரைகளும் நேர்த்தியாகவும் அழகாகவும் அணிவகுத்து செல்கின்றன ஆனால் அந்த குதிரைகளின் ஒன்று அணிவகுத்து செல்லும் மற்ற குதிரைகளுடன் செல்லாமல், திரும்பி எதிர்ப்பக்கமாக நின்றது. அந்தக் குதிரையை ஓட்டும் படைவீரனின் கட்டுப்பாட்டிற்கு அடங்காமல், அவனை கீழே விழுத்தி விட்டது. பல மாதாங்களாக அந்த விசேஷித்த நாளுக் கென்று பயிற்ச்சி செய்யப்பட்ட அந்தக் குதிரை, சிறப்பிக்க வேண்டிய நாளிலே குழப்பம் விளைவித்தது. சீக்கிரமாக அந்தக் குதிரையை அணிவ குப்பிலிருந்து அகற்றிவிட்டார்கள். அதைப் பார்த்துக் கொண்டிருந்த தேசப்பற்றுள்ள ஜனங்களுக்கு அது வேதனை தரும் காட்சியாக இருந் தது. ஆனால் வேறு சிலருக்கோ அது ஒரு பரிகாசத்திற்குரிய நிகழ்வாக இருந்தது.

எங்களுடைய வாழ்க்கையிலும் குழப்பங்கள் ஏற்படும் நாளிலே, எங்க ளைக் குறித்த கரிசணையுள்ளவர்களுக்கு அது வேதனைக்குரிய காரிய மாக இருக்கும். ஆனால், தேவனை ஏற்றுக் கொள்ளாதவர்கள், தேவனு க்கு விரோதமான வாழ்க்கை வாழ்பவர்கள், தேவனை விசுவசித்து அவர் வழியிலே வாழ்பவர்களை பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். எங்கள் வாழ்க்கையின் ஏற்படும் குழப்பங்கள் அவர்களின் பரிகாசத்திற்குரியதாக இருக்கும். எங்கள் அக்கறையற்ற வாழ்வின் நிமித்தம் பிதாவாகிய தேவ னின் நாமம் தூஷிக்கப்பட கூடாது. அந்த அணிவகுப்பில் கட்டுக்கடங் காமல் போன குதிரையை, அவர்கள் மறுபடியும் பயிற்ச்சிக்குட்படுத்தி, அதன் நிலையை மறுபடியும் ஆராய்ந்து பார்த்திருப்பார்கள். அந்த குதிரையானது, இல்லை நான் கட்டுக்கடங்கமாட்டேன் என்று இருந்தால் அதை அந்த விசேஷட அணிவகுப்பு படையிலிருந்து நிரந்தரமாக வில க்கியிருப்பார்கள்.

கிறிஸ்துவை அறியும் முன்னதாக, நாங்கள் ஆக்கினைக்குட்பட்டவர்களும், தேவனற்றவர்களாகவும் இருந்தோம். மீட்பராகிய இயேசு கிறிஸ்து, எங்கள் பாவத்திற்காக தம்மை பலியாக ஒப்புக் கொடுத்ததால் நாங்கள் எங்கள் மேலிருந்த ஆக்கினையிலிருந்து மீட்கப்பட்டோம். இனி நாம் நம்முடைய வர்கள் அல்ல நாம் கர்த்தருடையவர்கள். விலை மதிக்க முடியாத இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கிரயத்திற்கு கொள்ளப்பட்டவர்கள். தேவனுக்கு ஏற்ற கிரியைகளை நடப்பிக்கும்படியாக வேறு பிரிக்கப்பட்டிரு க்கின்றோம். இந்த பூமியிலே தேவனுடைய நாமத்தை பிரஸ்தாபப்படுத்தும்

படியாய் தேவன் எங்களை தெரிந்திருக்கின்றார். அவருடைய நற்செய்தியை அவரை அறியாதவர்களுக்கு கூறும்படியாய் நியமித்திருக்கின்றார். இவைகள் நிறைவேற்றி முடிக்கின்றவர்களுக்கு நித்திய ஜீவனை பரிசாக வைத்திருக்கின்றார். இன்று பலர் பரிசுப் பொருளாகிய நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளும்படி விரும்புகின்றார்கள். ஆனால் இந்த பூமியிலே தேவனால் முன்குறிக்கப்பட்டவைகளை நிறைவேற்றி முடிக்க மனதற்றவர்களாக வாழ்கின்றார்கள். இப்படியாக ஆன்மீக ஆரோக்கியத்தை இழந்து போகின்றார்கள்.

ஏதேனிலே, வலுசர்ப்பமாகிய பிசாசானவன், ஏவாளுக்கு ஆலோசனை கூறினான். முதலாவதாக, எனக்கு ஆலோசனை கூறும் இவன் யார்? இவர் தேவனுடையவரா? தேவனுடைய நாமத்தை பிரஸ்தாபப்படுத்துகின்றவரா? என்னும் கேள்விகள் ஏவாள் தன் உள்ளததிலே கேட்டிருக்க வேண்டும். அன்று பிசாசானவன் தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக ஆலோசனை கூறி ஏவாளை வஞ்சித்தான். அந்த பிசாசானவன், இயேசுவை சோதிக்கும்படி இயேசுவுககும் ஆலோசனை கூறினான். ஆனால் இயேசுவானவரோ அவனுக்கு இடங்கொடாமல், தேவனுடைய வார்த்தையினால் அவனை ஜெயம் கொண்டார். இதுவே ஆன்மீக ஆரோக்கிய வாழ்வின் வழியாகும்.

எங்கள் வாழ்க்கையிலே தேவைகள் ஏற்படும் போது மனிதர்கள் ஆலோசனைகளை கூறுவார்கள். முதலாவதாக, எனக்கு ஆலோசனை கூறும் இவன் யார்? இவர் உண்மையாகவே தேவனுடையவரா? தேவனுடைய நாமத்தை பிரஸ்தாபப்படுத்துகின்றவரா? என்பதை ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள். ஒருவர் தேவனுக்கு விரோதமாக ஒரு சிறிய காரியத்தை செய்யும்படி ஆலோசனை சொல்லுபவராக இருந்தால், அவர் தேவனுடையவர் அல்ல என்பதை அறிந்து கொள்ளுங்கள். எடுத்துக்காட்டாக, ஒரு நாள் நீங்கள் ஆராதனைக்கு போகாமல் எங்கள் ஒன்றுகூடலுக்கு வந்தால் என்ன? நீங்கள் அதற்கு இடங் கொடுத்தால் ஒரு நாள், பின்பு பல நாட்களாய் மாறிவிடும். படிப்படியாக ஆத்தும நோய் கொண்டவர்களாய் மாறிவிடுவீர்கள்.

பிரியமானவர்களே, நாகமான் என்னும் தளபதி, சீரிய தேசத்திலே அவன் பெரியவனாக இருந்தும் அவனுக்கு குஷ்டரோகம் ஏற்பட்டிருந்தது. அதிலிருந்து ஆரோக்கியமடையாமல், எத்தனை நாட்களுக்கு விலையுயர்ந்த வஸ்திரங்களால் அந்த நோயை மூடி மறைக்க முடியும்? அவன் தன் வீடடின் பணிப்பெண்ணின் நல்ல ஆலோசனையின்படி இஸ்ரவேலிலுள்ள தேவ மனிதனிடம் சென்று ஆரோக்கியத்தை பெற்றுக் கொண்டன். எங்கள் வாழ்க்கையில் குணப்பட வேண்டிய காரியங்கள் இருந்தால் அவைகளை தேவனிடம் கொடுக்க வேண்டும். தேவனுடைய நாளிலே வெட்கப்பட்டுப் போகாதபடிக்கு, தேவனோடு நடந்து செல்லும் வாழ்க்கையிலே உறுதியாகத் தரித்திருக்க வேண்டும். எங்கள் ஆவி ஆத்துமா சரீரம் தேவனுக்கு முன்னதாக குற்றமற்றதாக காணப்படும்படிக்கு உங்கள் ஆரோக்கியத்தை இயேசு கிறிஸ்துவுக்குள் காத்துக் கொள்ளுங்கள்.

[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும்

இணையத் தளத்தில் (**INTERNET WEBSITE** இல்)

தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம். https://gtachurch.ca/im]

# பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு

இந்தப் பூவுலகிலே,மனிதர்கள் செல்வந்தர்களாகவோ அல்லது தங்கள் மாதாந்த ஊதியத்தின் அடிப்படையில் வாழ்கின்றவர்களாகவோ அல்லது நாளாந்த கூலிகளாகவோ இருக்கின்றார்கள். இன்னும் சிலர் வறுமைக் கோட்டின் கீழ் தங்கள் நாளாந்த அடிப்படைத் தேவைகளை சந்திப்பத ற்கு மிகவும் கஷ்டப்பட்டுவருகின்றார்கள். பொருளாதார நிலைமை எப்படியாக இருந்தாலும், தங்களிடமி ருக்கும் நிர்வாகத்தின் அளவின்படி, பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு எப்போதும் சிறந்ததை கொடுக்க வே ண்டும் என்று உழைக்கின்றார்கள். நாங் கள் ஒவ்வொருவரும் எங்கள் பெற் றோரைக் குறித்து இன்று சிந்தித்துப் பார்ப்போமென்றால், அவர்களைக் குறி த்த நன்றி எங்கள் உள்ளத்தில் பெரு கும். அப்படியாக சிந்திக்கின்ற வேளை யிலே, நீங்கள் உங்களிடம் ஒரு கேள் வியை கேட்டுக் கொள்ளுங்கள். ஏன் என் பெற்றோர் அப்படியாக என க்காக பல தியாகங்களை செய்தார்கள் என்று சிந்தித்துப் பாருங்கள். தங்கள் பிள்ளைகள், ஆரோக்கியமாக, சமாதானமான வாழ்க்கை வாழ வேண்டும் என்பதே அவர்களின் பிரதான நோக்கமாக இருந்தது. அந்த நோக்கம் எங்கள் வாழ்க்கையில் நிறைவேறும்படி நாங்கள் இடம் கொடு க்கின்றோமா. என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஒருவேளை, இந்தப் பூவுலகிலே, சிலர் தங்கள் பெற்றோரால் நன்மைகளை பெற்றுக் கொள்ளாதிருக்கலாம். ஆனால் எங்கள் பரம பிதாவானவர் பாரபட்சம் இல்லாமல் யாவரையும் அன்பு செய்கின்றார். மீட்பராகிய இயேசு வழி யாக நாங்கள் அவருடைய பிள்ளைகளாகும்படி செய்திருக்கின்றார். இந்த புதிய ஆண்டை ஆரம்பிக்கின்ற வேளையிலே, பிதாவாகிய தேவ னுடைய அன்பின் ஆழத்தை சிந்தித்துப் பாருங்கள். இந்த உலகத்திலே, பாவியாக இருக்கும் ஒரு மனுஷன், அழிந்து போகக்கூடாது என்று யார் அவனை மனதார அன்பு செய்யக் கூடும்? எங்கள் பரம தந்தை, பரிசுத்த வாழ்வு வாழும்படிக்கு பாவிகளுக்கு மறுவாழ்வு கொடுப்பது மட்டும ல்லாமல், அவர்களது முன்னிலைமையை கருதாமல், அவர்களைத் தம் முடைய பிள்ளைகளாக ஏற்றுக் கொள்கிறார். யாவரும் பரலோகிலே நித்திய வாழ்வு அடைய வேண்டும் என்பதே அவருடைய அநாதி தீர்மா னம். அந்த நோக்கம் எங்களில் நிறைவேறும்படிக்கு, இந்த ஆண்டிலே எங்களை தேவனிடத்தில் ஒப்புக் கொடுப்போம்.

**1 யோவான் 3:1**

**நாம் தேவனுடைய பிள் ளைகளென்று அழைக்கப் படுவதினாலே பிதாவான வர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரி தென்று பாருங்கள்**

**ஜெபம்:** எங்களை உம்முடைய பிள்ளைகளாக அழைத்த தேவனே, உம்மு டைய அன்பு அளவிடமுடியாதது. உம்முடைய அழைப்பின் நோக்கத்தை உணர்ந்து வாழும்படிக்கு எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**சனி | தை 2** 📖 மாலை வாசகம் - எபேசியர் 4:1-6

# காட்சிக் கூடம்

**1 தெச 5:11**

**ஆகையால் நீங்கள் செய்துவருகிறபடியே, ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்.**

ஒரு பிராந்தியத்திலுள்ள வர்த்தர்கள் யாவரும் வருடத்திற்கு ஒருமுறை ஒன்று கூடி வர்த்தக சம்மேளன கருத்தரங்கை நடத்தி வந்தார்கள். அவர்கள் ஒன்றுகூடி வரும்போது, ஒவ்வொரு ஸ்தாபனங்களும் தங்கள் வியாபாரத்தை குறித்த காட்சிக் கூடம் (showcase) ஒன்றை வைத்து, தங்கள் வியாரபாரத்தை குறித்த தனித்துவத்தையும் மேன்மையையும் வெளிக்காட்டுவார்கள். ஆனால் அவர்கள் அங்கு ஒன்று கூடி வந்தாலும், அவர்கள் மத்தியிலே, அவர்களுக்குள், மறைமுகமாகவோ அல்லது வெளிப்படையாகவோ எப்போதும் வியாபார போட்டி (competition) இருந்து வந்தது. பரலோக யாத்திரிகளாகிய எங்கள் வாழ்க்கையிலும், இயேசுவின் நாமத்திலே, பல ஒன்றுகூடல்களை நாம் நடத்தி வருகின்றோம். அதாவது குடும்ப உறவுகள் மட்டத்திலே, நண்பர்கள் மத்தியிலே, சமுகத்திலே, சபையிலே நாங்கள் பல ஒன்றுகூடல்களை நடத்தி வருகின்றோம். எங்கள் ஒன்றுகூடல்கள் வியாபார காட்சிக் கூடம் போல இருக்கலாகாது. நாங்கள் இந்த உலகத்திலே வாழ்ந்தாலும், நாங்கள் எங்கள் உடன் சகோதரர்களுக்கு போட்டியாளர்கள் அல்ல. என்னைப் பார், என் வாழ்க்கையைப் பார், என்று நாங்கள் எங்கள் வாழ்க்கையைக் குறித்து பெருமைபாராட்டலாகாது. எங்கள் வாழ்க்கையிலேற்பட்டிருக்கும் உயர்வுகள் தேவனால் உண்டானதாக இருந்தால், தேவனுடைய பாதத்திலே எங்களை தாழ்த்தி, அந்த உயர்வுகளை எமக்கு தந்த தேவனை நாங்கள் மகிமைப் படுத்தும்படி, எங்கள் வாழ்க்கையின் கிரியைகள் அமைய வேண்டும். நாம் மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருக்க வேண்டும். ஒரு கிறிஸ்தவனானவன் தன் வாழ்க்கையின் வழியாக இயேசுகிறிஸ்துவின் மகிமையை வெளிப்படுத்தும்படியான ஒரு காட்சிக் கூடத்தை தன்னிலே உடையவனாக இருக்கின்றான். அந்த காட்சிக் கூடத்திலே மாயமற்ற தாழ்மையானது இருக்கும். அந்த காட்சிக் கூடம் தேவனுடைய அங்கீகாரத்திற்குட்பட்டதாக இருக்க வேண்டும். இந்தப் புதிய ஆண்டிலே குடும்பமாக சபையாக நம்மைத் தாழ்த்தி ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுவோம்.

**ஜெபம்**: நித்திய வாழ்விற்கு எங்களை அழைத்த தேவனே, பரலோக யாத்திரிகளாகிய நாங்கள், தாழ்மையுள்ள உள்ளத்தோடு ஒருவரை ஒருவர் தேற்றி தேவ சித்தத்தை நிறைவேற்ற கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நானும் என் வீட்டாரும்

எனக்கு ஒரு நல்ல உத்தியோகம் கிடைத்திருக்கின்றது. நல்ல பதவி, அதிக சம்பளம், வருடாந்த மிகை ஊதியம், மருத்துவ சலுகைகள், தாராளமான விடுமுறை நாட்கள் உள்ளடக்கியது என்றும் தன் ஜெபத்திற்கு பதில் கிடைத்தது என்றும் ஒரு மனிதனானவன் கூறினான். மாதங்கள் கடந்து சென்ற போது அவனை அறியாமலே அவன் தன் வேலையிலே அதிக நேரத்தை செல விட ஆரம்பித்தான். வேலைப் பழுவி லிருந்து ஒரு இடைவெளி தேவை ப்படும் போது, விடுமுறை நாட்களை எடுத்து, குடும்பத்தோடு உல்லாசப் பய ணங்களுக்கு சென்று வந்தான். “அவன் உழைக்கின்றான், தன் பிரயாசத்தின் பலனை அனுபவிக்கின்றான்”. அதில் என்ன தவறு? ஆனால் தற்போதைய சூழ்நிலையிலே படைத்த தேவனை ஆராதிப்பது என்பது அவனுடைய வாழ்க்கையில் தேவையா னதொன்றாக அவனுக்குத் தெரியவில்லை. தேவனுடைய சமுகத்திலே தரித்திருந்து ஜெபம் செய்ய அவனுக்கு நேரமில்லை. நிம்மதியான வாழ்வைத் தரும் சத்திய வேதத்தை வாசிக்க சமயமில்லை. பிரியமான சகோதர சகோதரிகளே, இந்த உலகமும் அதன் வேஷமும் சீக்கிரமாய் கடந்து போகின்றது. தேவனுக்கும் உங்களுக்கும் இடையிலே எதுவும் வராதபடிக்கு உங்கள் வாழ்க்கையை நீங்கள் காத்துக் கொள்ள வேண் டும். தேவனற்ற செல்வந்தனின் வாழ்க்கையைவிட, தேவனோடிருக்கும் ஏழையின் வாழ்வு மேலானது. இந்தப் புதிய ஆண்டிலே உங்கள் வாழ்க் கையை நன்கு ஆராய்ந்து பாருங்கள். உங்களுக்கு சமாதான வாழ் வைத்தரும் தேவனையும், தேவனுடைய சமூகத்தையும்விட்டு பிரிக்கும் படியாக உங்கள் வாழ்க்கையிலே நன்மையாகத் தோன்றும் காரியங்கள் எவை என்பதை அறிந்து அவைகளை உங்களைவிட்டு அகற்றி விடுங் கள். இன்று மனிதர்கள் தங்கள் தங்கள் வாழ்க்கை முறைக்கு ஏற்றபடியி ருக்கும் பரிசுத்தத்தையே தேடுகின்றார்கள். பிரியமானவர்களே, அது தேவன் விரும்பும் பரிசுத்தம் அல்ல. பரிசுத்த வாழ்வை காத்துக் கொள் ளும்படியான வாழ்க்கை முறையை தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் இந்த உலக போக்கிற்கு உடன்படாதபடிக்குத் தேவனுயை சித்தம் உங்கள் வாழ்வில் நிறைவேறும்படி கருத்துள்ள வாழ்க்கையை அமை த்துக் கொள்ளுங்கள். தேவனை உண்மையாய் சேவிப்பவர்கள் முதலா வதாக தேவனுடைய ராஜ்யத்தையும் அதன் நீதியையும் நாடித் தேடு வார்கள். உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் கிருபையின் நாட்களிலே தேவனிடம் கிட்டிச் சேருங்கள்.

**யோசுவா 24:15**

**நானும்என் வீட்டாருமோ வென்றால், கர்த்தரை யே சேவிப்போம் என் றான்.**

**ஜெபம்**: சமாதானத்தின் தேவனே, இந்த உலகின் போக்கின்படி நன் மையாக தோன்றும் காரணிகளை இனங்கண்டு அவைகளை என்னை விட்டு அகற்றிவிட பிரகாசமுள்ள மனக்கண்களை தந்தருள்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பிதாவாகிய தேவனுக்குரிய கனம்

**மல்கியா 1:6**

**நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே**

ஒரு கிராமத்திலே வசித்து வந்த பக்தியுள்ள இளைஞன் ஒருவன், தான் வானொலியில் தேவ கானங்களை பாட வேண்டும் என்று மிகவும் வாஞ்சையுள்ளவனாக இருந்தான். அதை முன்னிட்டு, தான் பாடிய பாடல் ஒன்றை இசைத்தட்டில் பதித்து, குறிப்பிட்ட பிராந்திய வானொலி ஸ்தாபனமொன்றிற்கு விண்ணப்பித்திருந்தான். பல மாதங்களுக்கு பின் அந்த வானொலி ஸ்தாபனத்தின் இசைப் பிரிவின் நிர்வாகிகளிடமிருந்து அவனுக்கு பதில் வந்திருந்தது. அதன் படிக்கு, குறிப்பிட்ட ஞாயிற்றுக் கிழமையொன்றிலே, காலையிலே ஒத்திகைக்காக வரும்படிக்கு அழைப்பு விடுத்திருந்தார்கள். கிடைப்பதற்கு அரிதான சந்தர்ப்பமொன்று உனக்கு கிடைத்திருக்கின்றது என அவன் நண்பர்கள் கூறினார்கள். ஆனால் அந்த இளைஞன் "ஞாயிறு காலையானது நான் என்னை படைத்த தேவனை ஆராதிக்கும் நாள், என் வாழ்க்கையிலே அது மிகவும் முக்கியமான நியமனம் (appointment), எனவே நீங்கள் குறிப்பிட்ட நாளிலே எனக்கு ஒத்திகைக்கு வர முடியாது" என பதில் அனுப்பியிருந்தான். அதைக் கேள்விப்பட்ட சபையின் வயது சென்ற ஊழியர் அவனை நோக்கி: "தம்பி, பிராந்திய வானொலியில் பாடக்கிடைப்பது அரிய சந்தர்ப்பம், ஆனால் இக்காலத்திலே, எங்களை நேசிக்கின்ற தேவனாகிய கர்த்தரை தொழுதும் கொள்ளும் நாளைக் குறித்து உன்னிடமிருக்கும் வைராக்கியம் அதைவிட மிகவும் காண்பதற்கரிதான செயல். அதைவிட்டுவிடாதே, இறுக்கப்பற்றிக் கொள்" என்று அவனை பாராட்டினார். பிரியமானவர்களே, இந்த உலகிலே பிரபல்யமானவர்களையும், பதவியிலுள்ள மனிதர்களையும் சந்திப்பதற்காக, மக்கள் தங்கள் வாழ்க்கையை மாற்றியமைக்க எப்போதும் தயாராக இருக்கின்றார்கள். ஆனால் வானமும் பூமியும் படைத்த சர்வவல்லமையுள்ள தேவனுக்குரிய கனத்தை அற்பமாக எண்ணுகின்றார்கள். நம் வாழ்க்கையில் நாம் எதை மேன்மைப் படுத்துகின்றோமோ, அதனால் வரும் பலனை பெற்றுக் கொள்வோம். தேவனுக்குரிய கனத்தை மேன்மைப்படுத்துகின்றவன், அவராலே அங்கீகாரம் பெற்றுக் கொள்கின்றான். இந்த உலக காரியங்களை தன் வாழ்க்கையிலே தேவ னுக்கு மேலாக உயர்த்துகின்றவர்கள் இந்த உலகத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்கின்றார்கள். எனவே, பிரியமுள்ள பிள்ளைகளாக பிதா வாகிய தேவனுக்குரிய கனத்தை அவருக்கு கொடுங்கள்.

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, நீர் எல்லாவற்றிற்கும் மேலானவர் என்பதை உணர்ந்து, உம் நாமத்திற்குரிய கனத்தை மனதார செலுத்தும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நிலையான நகரம் நமக்கிங்கில்லை

**எபிரெயர் 13:14**

**நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம்.**

ஒரு குடும்பத்தினர், சமாதானமான வாழ்வை நாடி, தாங்கள் வசிக்கும் ஊரிலிருந்து, தூரத்திலுள்ள ஊருக்கு சென்று கொண்டிருந்தார்கள். போகும் வழியிலே கண்ணைக் கவரும் பல காட்சிகளை கண்டார்கள். இடைவெளியிலே, சில இடங்களிலே அவர்கள் சற்று தரித்து நின்ற போது, அந்த இடத்திலே பல மனமகிழ்ச்சியைத் தரும் உல்லாசமான நிகழ்ச்சிகள் (fun) நடப்பதைக் கண்டு அங்கு சில நாட்களை கழித்தார்கள். இப்படியாக அவர்கள் சில இடங்களிலே தரித்து நின்ற போது, தாங்கள் ஆரம்பித்த பிரயாணத்தின் நோக்கத்தை மறந்து, கிடைக்கும் சந்தர்ப்பங்களிலே உல்லாசமாக இருப்போம் என்று தங்களை அறியாமலே உலக போக்கிற்குள் சிக்கிக் கொண்டார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, இவ்வண்ணமாகவே, பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் ஏன் பாடசாலைக்கு செல்கின்றோம் என்ற நோக்கத்தையும், வேலைக்கு செல்பவர்கள் தாங்கள் ஏன் வேலைக்கு செல்கின்றோம் என்ற நோக்கத்தையும் மறந்து, வேறு காரியங்களிலே தங்கள் புலன்களை செலுத்தி தங்கள் வாழ்வில் பெரிதான நோவுகளை ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். இந்த உலகிலே வாழும் மனிதர்களுக்கு ஒரு மேலான அழைப்பும் நோக்கமும் உண்டு. இந்த பூமி எங்கள் நிரந்தர வசிப்பிடம் அல்ல. பரம யாத்திரிகளாக, வாடகை வீட்டில் வாழ்வதுபோல் இந்தப் பூமியை கடந்து, நாங்கள் தாபரிக்கும் ஊருக்கு சென்று கொண்டிருக்கின்றோம். அந்த மேலான நோக்கத்தை நாங்கள் ஒரு போதும் மறந்துவிடக்கூடாது. இந்த உலகத்திலே என்னத்தை அனுபவித்தீர்கள்? வாழும்வரை உல்லாசமாக இருப்போம் என்பது மனித அறிவுக்கு ஏற்புடையதாக இருக்கலாம் ஆனால் அது பிதாவாகிய தேவனுடைய திட்டமல்ல. உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் உங்கள் கண்களை பதிய வைக்காதிருங்கள். அவைகள் அநித்தியமானவைகள். உலகமும் அதின் ஆசை இச்சையும் ஒழிந்துபோம் தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவன் தன் ஆத்துமாவை நித்திய மரணத்தினின்று காத்துக் கொள்கின்றான். பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்காதிருங்கள் அவை யாவும் அழிந்து போகும். பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள் அவை நித்தியமானவைகள். உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும். எனவே நிலையான பரலோகத்தை நோக்கி முன்னேறிச் செல்வோம்.

**ஜெபம்**: பரலோக தேவனே, இந்த உலகத்தின் போக்கின்படி வாழ்ந்து, உம்முடைய மேலான நோக்கத்தை மறந்து என் வாழ்க்கையை நான் அழித்துக் கொள்ளாதபடிக்கு என்னை காத்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எங்களில் இருப்பவர் பெரியவர்

இந்த உலகிலுள்ள எல்லா பாடசாலைகளிலும் தவணைக்குத் தவணை மணவர்களுக்கான பரீட்சை (சோதனை) நடத்தப்பட்டுவருகின்றது. பாடசாலையிலே பாடங்களை கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களால் நடத்தப்படும் பரீட்சைகளைவிட இன்னும் பல சோதனைகளை மாணவர்கள் எதிர்நோக்குகின்றார்கள். சில மாணவர்களுக்கு வீட்டிலே படிக்கக்கூடிய சூழ்நிலைகள் இல்லை. வேறு சிலர், பாடசாலைக்கு செல்லும் சக மாணவ மாணவிகளால் பல அழுத்தங்களுக்கு உள்ளாகின்றார்கள். பாடங்களை கற்கும் மாணவர்கள் அதை முறையாக கற்றுக் கொள்ளாத படிக்கு, அவர்கள் எண்ணங்களை வேறு நெறிமுறையற்ற காரியங்களுக்கு திசை திருப்பி விடுகின்றார்கள். இப்படியாக நன்மையை நாடி பாடசாலைக்கு செல்லும் மாணவ மாண விகள் நாளுக்கு நாள் பலவிதமான சவால்களை எதிர்நோக்குகின் றார்கள். அதனால் படிப்பை விட்டுவிடுவது சரியாகுமோ? பாடசாலை வேண்டாம் என்று தள்ளிவிடுவது சரியாகுமோ? இல்லை. இவ்வண் ணமாகவே இந்தப் பூமியிலே எங்கள் வாழ்க்கையும் அமைந்திருக்கி ன்றது. இந்தப் பூமியிலே தேவனுடைய சித்தத்தை செய்ய விரும்பி, அந்த வழியிலே நடக்கும் மனிதர்கள் பல சவால்களை எதிர்நோக்குகி ன்றார்கள். பலர் உபத்திரவங்களுக்குட்படுத்தப் படுகின்றார்கள். அதற்கு எவருமே விதிவிலக்கானவர்கள் அல்லர். மனித குலத்தை மீட்கும்படி உலகிலே பிறந்த ஆண்டவர் இயேசு பல சவால்கள், உபத்திரவங்கள் மத்தியிலே தேவனுடைய சித்தத்தை செய்து முடித்தார். பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை தடுத்து நிறுத்தும்படிக்கு, பிசாசானவன் ஆண் டவர் இயேசுவை சோதித்தான். அன்றைய நாளிலிருந்த மதத்தலைவர்க ளால்பெரும்பான்மையானோர் இயேசுவுக்கு எதிராக செயற்பட்டு கொண் டிருந்தார்கள். அவைகள் மத்தியிலும் இயேசு பிதாவின் திருச்சித்தத்தை பரிபூரணமாக செய்து முடித்தார். எங்களுடைய நாளாந்த வாழ்க்கையி லும் நாங்கள் பிதாவின் சித்தத்தை செய்து முடிக்காதபடி தடைப்படுத் தும் பல தீய சக்திகள் உண்டு. அவற்றை கண்டு சோர்ந்து போகாதிருங் கள். நாங்கள் அவற்றை ஜெயம் கொள்ளும் பொருட்டு, எங்களை வழி நடத்தும் தூய ஆவியானவர் எங்களோடு இருக்கின்றார். அவர் இயேவின் நாமத்திலே எங்கள் பயத்தை அகற்றி, பெலவீன நேரத்திலே கிருபை அளிக்கின்றார். நாம் இந்த உலகத்தினால் உண்டாகும் அழுத்த ங்களை கண்டு பின்னிட்டு போகாமல், இயேசுவின் நாமத்தில் முன்னேறுவோம்.

**1 யோவான் 4:4**

**உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்.**

**ஜெபம்:** சகலமும் அறிந்த தேவனே, இந்த உலகத்தினால் உண்டாகும் அழுத்தங்களினால் நான் பின்னிட்டுச் சோர்ந்து போகாதபடிக்கு உம்மு டைய திருச்சித்தத்தை என் வாழ்வில் நடத்தி முடிக்க கிருபை செய்வீ ராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனுஷனுடைய பிரயாசம்

இந்த உலகத்தில் வாழும் மனிதர்கள் ஆர்வத்துடன் கல்வி கற்கின் றார்கள், கடுமையாக உழைக்கின்றார்கள். ஏன் அப்படியாக செய்கின் றார்கள்? இந்த உலகத்திலே கஷ்டப்படாமல், தாராளமாக பணம் சம்பா தித்து தாம் நிம்மதியாக வாழ வேண்டும் என்று பிரயாசப்படுகின்றார்கள். கொடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களை பிரயோஜனப்படுத்தி, இளவயதிலே கல்வியை சீராக கற்பதும், பின்பு உற்சாகத்துடன் உழைப்பதும் பிள் ளைகளுக்கு நல்லது. ஆனால், கல்வியினால் மட்டும் ஒரு மனிதனுக்கு மனச் சமாதானத்தை கொடுக்க முடியுமா? கடுமையாக உழைப்பதினால் மட்டுமே ஒரு மனிதனுடைய வாழ்வில் மனத்திருப்தி உண்டாகி விடுமோ? ஒரு வேளை இவைகளினால் ஒரு மனித னானவன் தன் சரீரத்திற்கு தேவை யானவற்றை இந்த உலகிலே பெற் றுக் கொள்ளலாம். இந்த உலகிலே மனிதர்கள் மத்தியிலே அங்கீகாரத் தை பெற்றுக் கொள்ளலாம். ஆனால் ஆன்மீக சமாதானத்தையும், மனத்திரு ப்தியையும் விலை கொடுத்து வாங்க முடியாது. ஏனெனில் அவைகள் இந்த உல கத்தினால் உண்டாகுவதில்லை. ஆன்மீக சமாதானம் தேவனு டைய ஈவு. இதை உணர்ந்து கொள்ள முடியாதபடிக்கு, இந்த உலகிலு ள்ள கல்விமான்கள் மற்றும் ஐசுவரியவான்களின் மனக் கண்கள் இரு ளடைந்து போகின்றது. இவர்களிடம் துன்மார்க்கத்திற்குரிய மதுபான வெறி கொள்ளலும், களியாட்டங்களும், விபச்சாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை போன்ற கிரியைகள் இல்லாதிருக்கலாம் ஆனால் பொரு ளாசையானது (பண ஆசை) இவர்களை அறியாமலேயே இவர்கள் உள்ளத்தை ஆட்கொண்டுவிடுகின்றது. பண ஆசையானது வாழ்விலே எல்லாத் தீமைக்கும் வேராக இருக்கின்றது என பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. இந்த நிலைமையானது, பிசாசானவனினால் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் சோதனை என்பதை உணர்ந்து கொள்ள முடியாமல் இருதயம் கடினப்பட்டு விடுகின்றது. பிரியமானவர்களே, சற்று தரித்தி ருந்து சிந்தியுங்கள். உங்களுக்கு உண்டாகும் சோதனைகள் எல்லாம் ஆரம்பத்திலே தீமையாகத் தோன்றாது. அவை நன்மையானதும் அவசி யமானதும் என்பது போல எமக்கு காட்சியளிக்கும், பின்பு படிப்படியாக அவை உங்கள் வாழ்க்கையை பற்றிக் கொள்ளும். தேவனுக்கு பயந்து அவருடைய வழியிலே நடப்பதையே தெரிந்து கொள்ளுங்கள். அவரே உங்களுக்கு ஆன்மீக சமாதானத்தை தந்து வழிநடத்துவார்.

**பிரசங்கி 6:7**

**மனுஷன் படும் பிரயாச மெல்லாம் அவன் வாய்க் காகத்தானே; அவன் மனது க்கோ திருப்தியில்லை.**

**ஜெபம்:** சகலமும் அறிந்த தேவனே, போதுமென்கிற மனதுடன் கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் என்ற உண்மையை நான் மறந்து விடாமல் உம்மிலே நிலைகொண்டிருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நேர்வழியிலே நடவுங்கள்

"உன்னுடைய பன்னிரண்டாம் வகுப்பின் உயர்தரப் பரீட்சையில் நீ சித்தி பெறவேமாட்டாய். உன்னுடைய மேற்படிப்பை தொடருவதற்கு உனக்கு சந்தர்ப்பம் கிடையாது." என்று என்னுடைய வகுப்பாசிரியர் என்னைக் கடிந்து கொண்டார். ஆனாலும் நான் பரீட்சையில் சித்திபெற்று இப்போது பல்கலைக் கழகத்தில் படிக்கிறேன் என்று பெருமிதமாக ஒரு வாலிபன் கூறிக் கொண்டான். தந்தையார் அவனை நோக்கி: மகனே, நீ சித்தியடைந்து, பல்கலைகழ கத்திலே படிப்பதையிட்டு மகிழ்ச்சிய டைகின்றேன். ஆனால் அந்த ஆசிரி யர் ஏன் உனக்கு அப்படி கூறினார் என்று சற்று சிந்தித்துப் பார். அந்நா ட்களிலே, நீ தவறான வழியிலே செ ன்று கொண்டிருந்தாய். வீட்டிலும், பாட சாலையிலும் உன் தவறான போக்கி னால் பலருக்கு பல தேவையற்ற வேதனைகள் உண்டாயிற்று. அதனால் சில பாடங்களை நீ மூன்றுமுறை திரும்பத் திரும்ப எடுக்க வேண்டியதாக இருந்ததே என்று கூறினார். பொதுவாக மனிதர்கள் தாங்கள் செல்லும் தவறான வழிகளையும், அந்த வழியிலே செல்வதனால் வரும் பின்விளைவுகளையும் யாரும் சுட்டிக் காட்டுவதை விரும்புவதில்லை. தங்களை வழிநடத்த நியமிக்கப்பட்டவர்களின் ஆலோசனைகளை அவர்கள் அசட்டை செய்வதால், நேரடியாகவும் இலகுவாகவும் செல்ல வேண்டிய பிரயாணத்திலிருந்து பல வழிமாற்றங்களை (Detour) தங்கள் வாழ்க்கையில் தாங்களே ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். இதனால் அவர்களுடைய வாழ்க்கையிலும் அவர்களை சூழ உள்ளவர்களின் வாழ்க்கையிலும் பல நோவுகளை ஏற்படுத்தி விடுகின்றார்கள். தங்களை நல்வழிப்படுத்தும் வழிகாட்டிகளை குறித்த கசப்பை தங்கள் உள்ளத்திலே வளர்த்து விடுகின்றார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, தேவனுடைய வசனம் எங்கள் கால்களுக்குத் தீபமும், நாங்கள் செல்ல வேண்டிய பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. அந்த வழியிலே தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றவர்கள் தங்கள் வழிகளிலிருந்து தவறி, வழி மாற்றங்களை (Detour) ஒருபோதும் ஏற்படுத்திக் கொள்வதில்லை. இவர்கள் எப்போதும் தங்களுக்கு ஆலோசனை கூறி தங்களை நல்வழிப்படுத்தும் வழிகாட்டிகளுக்கு கீழ்ப்படிகின்றார்கள். எனவே உங்களுக்கு தேவ ஆலோசனைகளை கூறி நல்வழிப்படுத்து கின்றவர்களுக்கு கீழ்ப்படிந்து நடவுங்கள். அதனால் வாழ்விலே அநாவசியமான நோவுகளை நீங்கள் தவிர்த்துக் கொள்ளலாம்.

**சங்கீதம் 119:101**

**உம்முடைய வசனத்தை நான் காத்து நடக்கும்படிக்கு, சகல பொல்லாத வழிகளுக்கும் என் கால்களை விலக்குகிறேன்.**

**ஜெபம்:** நேற்றும் இன்றும் என்றும் மாறாத தேவனே, உம்முடைய வழிகள் நித்தியமானவைகள். அதிலே நடக்கின்றவர்கள் பாக்கியமுள்ளவர்கள். அந்த வழியிலே நான் நடக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இழந்து போனவைகள் மீட்ப்படைய வேண்டும்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த எளிமையான குடிமக்கள், முறைப்படி தேவ பக்தி, கல்வி, சுகாதாரம், சமூக நன்நடத்தை போன்ற விடயங்களை கற்று கொள்வதற்காக அந்த ஊரிலிருந்த சில மூப்பர்கள் ஒன்று சேர்ந்து, ஒரு சிறிய பாடசாலையை அமைத்தார்கள். அங்கு கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்கள் சேவை மனப்பான்மையோடு, அந்த ஊர் மக்களின் நலனுக்காக அயராது உழைத்து வந்தார்கள். பல ஆண்டுகள் கடந்து சென்றதும், அதன் பலனாக, அந்த ஊரிலுள்ள மாணவ மாணவிகள் தேசிய மட்டப் பரீட்சையில் அதிவிசேட சித்தியடைந்தார்கள். இந்த நிலை அதிகரித்துக் கொண்டு சென்றதால், மற்ற ஊரிலிருந்த பலர் இந்த பாடசாலையில் தாமும் கல்வி கற்க விரும்பினார்கள். அதற்காக அதிக பணத்தை நன்கொடையாக கொடுக்க முன்வந்தார்கள். காலப்போக்கில், அதனால் வரும் இலாபத்தை கண்ட பாடசாலை நிர்வாகிகள், பாடசாலை கட்டிடத்தை பெரிதாக்கி, அநேகர் அங்கு வந்து கற்றுக் கொள்ளும்படி அனுமதி வழங்கினார்கள். பல ஐசுவரியவான்கள் தங்கள் பிள்ளைகளை அந்த பாடசாலையில் சேர்ப்பதற்காக திரளான நன் கொடைகளை கொடுத்து வந்ததால், எளிமையானவர்களுக்கும் ஏழைகளுக்கும் அந்த பாடசாலையிலே அனுமதி எடுப்பது மிகவும் கடினமான காரியமாக இருந்து வந்தது. பல ஆண்டுகளுக்கு பின், அந்த ஊரிலுள்ள பாடசாலை, தேசிய மட்டத்திலே பிரபல்யமான பாடசாலையாக விளங்கிய போதும், அந்த ஊரிலுள்ள எளிமையான குடிமக்களுக்கு அந்த பாடசாலையில் அனுமதி எடுக்க முடியாமல் போய்விட்டது. அந்த ஊரிலே இருக்கும் பிரபல்யமான அந்த பாடசாலையினால் அந்த ஊரின் குடிமக்களுக்கு என்ன பலன்? சற்று சிந்தித்துப் பாருங்கள். போகும் வழி தெரியாமல், மேய்ப்பனில்லாத ஆட்டைப் போல அலைந்து திரிகின்ற எளிமையானவர்களையும், பாவிகளையும் இரட்சிப்பதற்காகவே ஆண்டவர் இயேசு இந்த உலகத்திற்கு வந்தார். எங்கள் தனிப்பட்ட வாழ்க்கையோ அல்லது எங்கள் குடும்ப வாழ்க்கையோ அல்லது நாங்கள் ஆராதிக்கச் செல்லும் ஆலயமோ ஒரு போதும் அந்த ஊரிலுள்ள பாடசாலையின் நிலைக்கு தள்ளுண்டு போகக்கூடாது. பாதை தெரியாமல் சிதறுண்ட ஆடுகளைப்போல இருக்கும் ஜனங்கள் தங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமான இயேசுவினிடத்திற்கு திரும்பும்படிக்கு அவர்கள் உள்ளமும், இல்லமும், அவர்கள் ஒன்றுகூடும் ஆராதனை ஸ்தலங்களும் அமைக்கப்பட்டி ருக்க வேண்டும்.

**லூக்கா 19:10**

இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்.

**ஜெபம்**: நீதியின் தேவனே, இந்த உலகிலே வாழும் நாட்களிலே, என் வாழ்விலே, உம்முடைய திருச்சித்தத்தை உணர்ந்து அதன்படி கிரியைகளை நடப்பிக்க மனப்பிரகாசமுள்ள கண்களை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மிகவும் சிறியவராகிய சகோதரர்

நியாயத்தீர்ப்பின் நாளிலே, ஆண்டவராகிய இயேசு தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். பிதாவாகிய தேவனுடைய சித்தம் செய்கின்றவர்கள் வலப்பக்கத்திலும், பிதாவாகிய தேவனுடைய சித்தம் செய்யாதவர்கள் இடப்பக்கத்திலும் பிரித்து விடப்படுவார்கள். அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர் வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண் டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுத ந்தரித்துக்கொள்ளுங்கள். பசியாயிரு ந்தேன், எனக்குப் போஜனங்கொடுத் தீர்கள் தாகமாயிருந்தேன், என் தாகத் தைத் தீர்த்தீர்கள் அந்நியனாயிருந் தேன் என்னைச் சேர்த்துக்கொண்டீர் கள். வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள் வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந் தீர்கள் காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார். அப் பொழுது, நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, நாங் கள் எப்பொழுது இவைகளை உமக்குச் செய்தோம் என்று ஆச்சரியப் படுவார்கள். அதற்கு இயேசு பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்க ளோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். பிரியமானவர்களே, தவறாமல் ஆலயம் செல் வதும், தினமும் வேதத்தை வாசித்து தியானிப்பதும், ஊக்கமாக ஜெபிப் பதும் கிறிஸ்தவ வாழ்க்கையில் இன்றியமையாதவைகள். ஆனால் கிறி ஸ்தவ வாழ்க்கை அத்துடன் பூரணப்படுவதில்லை. நாங்கள் கற்றவைக ளின்படி வாழ வேண்டும். தேவனுடைய ஆவியானவர் அவர்களுக்குள் வாசம் செய்வதால் அவர்கள் கிறிஸ்துவின் சாயலிலே வளர்ந்து பெரு குவார்கள். தினமும் கிறிஸ்துவைப் போல தியாகமுள்ள வாழ்க்கை வாழ் வார்கள். அவர்கள் பரம பிதாவைப் போல இரக்கத்தில் ஐசுவரியமுள்ள வர்களாக இருப்பார்கள். கைமாறு கருதாமல் நன்மை செய்வார்கள். சிறி யவர்கள் யார் என்பதை இயேசு குறிப்பிட்டிருக்கின்றார். இவைகளை அதிகதிகமாக தியானித்து கிறிஸ்துவின் அன்பை அவர்களுக்கு உங்கள து நற்கிரியைகள் வழியாக காண்பியுங்கள். கர்த்தர் தம்முடைய தயவி னால் உங்களை பராமரிக்கிறாரே.

**மத்தேயு 25:40**

**மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்**

**ஜெபம்**: இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, வசனத்தினாலும் நாவினா லுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் திக்கற்றவர்களையும் ஒடுக்கப்பட்டவர்களையும் அன்புகூரும்படிக்கு கிருபை செய்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

📖 மாலை வாசகம் – யாக்கோபு 1:27

# குறைச்சலிலே உதவி செய்யுங்கள்

எங்கள் அயலிலுள்ள என் நண்பனின் குடும்பத்தின் வாழ்க்கைத் தரத்தை பாருங்கள். மிகையான ஐசுவரியத்திலே எவ்வளவு செழிப்பாக, ஒன் றிற்கு இரண்டு வீட்டோடு வாழ்கின்றார்கள். என் நண்பனின் அப்பா, பல ஆண்டுகளுக்கு முன், காரியசித்தியுள்ளவராக வளர்ந்து வரும் வியா பார ஸ்தாபனங்களில் முதலீடு செய்ததால் இன்று அதன் பலனை அறுக்கின்றார்கள் என்று தன் தந்தையிடம் ஒரு மகனானவன் கூறினான். தந்தையார் அவனை நோக்கி: மக னே, உன் வாழ்க்கையிலே இருக் கும் குறை என்ன? உண்ண உண வும், உடுக்க உடையும், தங்க வீடும் தந்த தேவனுக்கு நன்றியுள்ளவ னாக இரு. உன் நண்பனின் குடும் பத்தைக் குறித்து விமர்சிப்பது என் னுடைய காரியமல்ல. ஆனால் எங்க ளுடைய குடியிருப்பு இந்த உலகத் திற்குரியதல்ல. எனவே எங்களு டைய முதலீடும் அதனால் உண்டா கும் பலனும் இந்த உலகத்திற்குரி யதல்ல. உன்னைவிடவும், மேலே இருக்கும் ஐசுவரியமுள்ளவர்கள் மேல் உன் கண்களை பதிய வைக் காமல், உனக்கு கீழிருக்கும் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, தங்குவதற்கு வீடின்றி தவிக்கும் கோடிக்கணக்கான ஏழைகளை நோக் கிப்பார். ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான். சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான். கருணைக்க ண்ணன் ஆசீர்வதிக்கப்படுவான் அவன் தன் ஆகாரத்தில் தரித்திரனுக் குக் கொடுக்கிறான். இவை சத்திய வேதம் கூறும் உண்மைகள். எனவே அவைகளிலே உன் முதலீடுகளை செய். இதனால் நீ பரலோகத்திலே உன் பலனை பெரிதாக அறுவடை செய்வாய் என்று அறிவுரை கூறி னார். பிரியமானவர்களே, மனிதன் எதை விதைக்கின்றானோ அதையே அறுப்பான். மற்றவன் எதை விதைக்கின்றான் எதை அறுக்கின்றான் என்று நோக்காமல், எங்கள் வாழ்க்கையிலே நாங்கள் பரலோக மேலா னவைகளிலே முதலீடு செய்வோம். குளிருக்கும் வெயிலுக்கும் ஒதுங்க வீடின்றி, உண்ண உணவின்றி, உடுக்கத் தகுந்த உடையின்றி வாடிடும் வறியவர்களுக்கு உங்கள் இருதயத்தை அடைத்து விடாதிருங்கள். தேவ அன்பு உங்களில் நிலைத்திருக்கும்படி மற்றவர்களின் குறைச்ச லிலே அவர்களுக்கு உதவி செய்யுங்கள்.

**1 யோவான் 3:17**

**ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்ச லுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவ னுக்குள் தேவ அன்பு நிலை கொள்ளுகிறதெப்படி?**

**ஜெபம்**: நித்திய வாழ்விற்கு அழைத்த தேவனே, நீர் எங்களுக்கு தந்திரு ப்பவைகளைக் குறித்து நன்றியறிதலுள்ளவர்களாக நாங்கள் இருக்கும் படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | தை 12

📖 மாலை வாசகம் – சங்கீதம் 37:1 – 9

# தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம்

சங்கீதம் 119:36

**எனக்கோ, தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம்.**

இதோ, அவர்கள் தவறான வழிகளிலே நடப்பவர்கள். அவர்கள் கண்கள் கொழுப்பினால் எடுப்பாய்ப் பார்க்கின்றது. அவர்கள் இருதயம் விரும்புவதிலும் அதிகமாய் நடந்தேறுகிறது. அவர்கள் சீர்கெட்டுப்போய், அகந்தையாய்க் கொடுமையைப் பேசுகிறார்கள் இறுமாப்பாய்ப் பேசுகிறார்கள். இவர்கள் என்றும் சுகஜீவிகளாயிருந்து, ஆஸ்தியைப் பெருகப்பண்ணுகிறார்கள் என்று மற்றவர்களை குறித்ததான எண்ணம் சில வேளைகளிலே தேவபிள்ளைகளின் இருதயத்தில் எழும்புவதுண்டு. துன்மார்க்கர் இவ்வண்ணமாக செழித்திருக்க நான் ஏன் விருதாவாக என் இருதயத்தைச் சுத்தம்பண்ணி, என் கைகளை குற்றங்களுக்கு விலக்கிக் காக்க வேண்டும்? நாள்தோறும் நான் செய்யும் சிறிய குற்றங்களுக்குக்கூட நான் வாதிக்கப்பட்டும், காலைதோறும் தண்டிக்கப்பட்டும் இருக்கிறேன் என்று ஒரு தேவ ஊழியருக்கு யோசனை உண்டாயிற்று. ஆனால் அந்த ஊழியர் தன்னுடைய யோசனை மிகவும் தவறானது என உணர்ந்தபோது, தன்னிலையுணர்ந்தவராய் இவ்விதமாய்ப் நான் பேசியதால் நான் காரியம் அறியாத மூடனைப்போலவும் தேவனுக்கு முன்பாக மிருகம் போலவுமிருந்தேன் என மனவருத்தப்பட்டார். அவர் தேவனை நோக்கி: நான் எப்பொழுதும் உம்மோடிருக்கிறேன் என் வலதுகையைப் பிடித்து நீர் தாங்குகிறீர். உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர். பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை. எனக்கோ, தேவனை அண்டிக் கொண்டிருப்பதே நலம் என்று அறிக்கையிட்டார் (சங்கீதம் 73). பிரியமானவர்களே, உன்னதமான தேவனுடைய ஆவியை பெற்றவர்களே, நித்திய வாழ்விற்கு அழைப்பைப் பெற்றவர்களே, ஒரு வினாடி கூட துன்மார்க்கரின் வழியைக் கண்டு சோர்ந்து போய்விடாதிருங்கள். துன்மார்க்கமான வாழ்க்கை வாழ தங்களை அர்ப்பணித்தவர்கள் இந்த உலகதிலுள்ளவைகளை நாடித் தேடுகின்றார்கள். இந்த உலகமும் அதிலுள்ளவைகளும் அழிந்து போகும். நித்தியமானதையும், அழியாததையும், கர்த்தர் நமக்காக வைத்திருக்கின்றார். எனவே, பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலடையாமலும், நியாயக்கேடுசெய்கிறவர்கள்மேல் பொறாமை கொள்ளாமலும், கர்த்தரை நம்பி நன்மைசெய்யுங்கள். கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிருங்கள். உங்கள் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிருங்கள்.

**ஜெபம்**: நீதிசெய்கின்றவன் இன்னும் நீதி செய்யட்டும் என்ற தேவனே, துன்மார்க்கரின் வழிகளை கண்டு நான் சோர்ந்து போகாமல், எப்போதும் உம்மையே அண்டிக் கொண்டிருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# மாறாத தேவனின் ஆளுகை

குறிப்பிட்ட வருடத்தின் ஆரம்பப் பகுதியிலே, ஒரு கம்பனியின் வியாரபாரமானது அதன் உரிமையாளர் எதிர்பார்த்ததிற்கும் அதிகமாக இருந்ததால், வருட இறுதியிலே அந்த கம்பனியினின் இயக்குனருக்கு மிகை ஊதியம் (Bonus) வழங்குவதாக அதன் உரிமையாளர் கூறி யிருந்தார். அதன்பொருட்டு குறிப்பிட்ட இயக்குனர் அயராது உழைத்து வந்தார். வருடத்தின் இறுதிப் பகுதி யிலே, தேசத்திலே ஏற்பட்ட பொருளா தார வீழ்ச்சியினால், அந்த கம்பனியின் வியாபாரம் வழமைக்கு மாறாக பெரும் வீழ்ச்சியைக் கண்டது. அதனால், அதன் உரிமையாளர் முன்குறித் திருந்த மிகை ஊதிய கொடுப்பனவை இரத்து செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டதால், அதன் இயக்குனர் பெரும் ஏமாற்றம் அடைந்தார். மனிதனுடைய வாழ்க்கையிலே ஒவ்வொரு கட்டத்திலும் பல எதிர்பார்ப்புக்கள் உண்டு. கணவன் மனைவிக்கு இடையில், பெற் றோர் பிள்ளைகளுக்கிடையில், தொழிலதிபர் தொழிலாளருக்கிடையில், ஆசிரியர் மாணவர்களுக்கிடையில் மற்றும் ஊழியர்கள் விசுவாசிகளு க்கிடையில் இதே போலவே எதிர்பார்த்த காரியங்கள் நடைபெறா தவிடத்து மனிதர்கள் ஏமாற்றம் அடைகின்றார்கள். இதன் விளைவாக மனிதர்கள் மத்தியில் மனநோவுகளும், பிரிவினைகளும், பல பின்னடை வுகளும் ஏற்படுகின்றது. இந்த நிலைமைக்கு எந்த மனிதனும் விதிவி லக்கானவன் அல்ல. ஆனால் தேவனுக்குப் பயந்து அவருடைய வழி யிலே நடப்பவர்களுக்கு, அதைத் தாங்கி கொள்ளும் பெலனை கர்த்தர் கொடுக்கின்றார். அது மட்டுமல்ல, இந்த உலகத்திலுள்ளவைகள் யாவும் அநித்தியமானவைகள் என்றும், அவை நிலையானவைகள் அல்ல என்றும் உணர்ந்து கொள்ளும் மெய்ஞானத்தை தருகின்றார். அதாவது, மனிதர்கள் யாவரும் ஏமாற்றுகின்றவர்கள் என்பது பொருளல்ல. மாறாக சில வேளைகளிலே மனிதர்கள் தாங்கள் சொன்ன வார்த்தையை நிறைவேற்ற வேண்டும் என்னும் வாஞ்சையுள்ளவர்களாக இருந்தாலும், சூழ்நிலைகளால் அவர்கள் மட்டுப்படுத்தப்படுகின்றார்கள் என்னும் அறிவை தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு தருகின்றார். எல்லா சூழ்நி லைகளிலும் அவர் மாறாதவராயிருக்கின்றார் என்னும் உண்மையை வெளிப்படுத்துகின்றார். அவருடைய ஆளுகையே நிலையானதும் நித்தி யமானதும் என மறுபடியும் மறுபடியும் உறுதிப்படுத்துகின்றார். தேவ அன்பிலே பயமில்லை. பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்.

**சங்கீதம் 112:7**

**துர்ச்செய்தியைக் கேட் கிறதினால் பயப்படான் அவன் இருதயம் கர்த் தரை நம்பித் திடனாயி ருக்கும்**

**ஜெபம்**: என்றும் மாறாத தேவனே, மாறிப் போகும் இந்த உலகிலே, மன அழுத்தங்களால் மனமடிவடையாதபடிக்கு, உம்முடைய மாறாத அன்பை பற்றிக் கொண்டு வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

| வியாழன் \| தை 14 | 📖 மாலை வாசகம் – 2 பேதுரு 3:1 –14 |
| --- | --- |

# அறியாத நேரம் வந்திடுவார்

வானிலையை பற்றிய அறிவுள்ள மனிதனொருவன், சில நாட்களுக்குள் வரவிருக்கும் பெரும் புயலைப்பற்றி தன் ஊரில் வாழ்ந்த ஜனங்களுக்கு எச்சரிப்பு விடுவித்தான். ஜனங்களில் பலர் எவ்வித ஆயத்தமும் இல்லாமல், அவன் கூறியவற்றை அற்பமாக எண்ணி தங்கள் அனுதின நடவடிக்கைகளை வழமைபோல தொடர்ந்தார்கள். சில நாட்களுக்கு பின், இராத்திரி வேளையிலே, சடிதியாக மின்சாரம் துண்டிக்கப்பட்டது. பெருங்காற்று வீசியதால் மரங்கள் முறிந்து விழுந்து நெடுஞ்சாலைகளை அடைத்துக் கொண்டது. வீட்டைவிட்டு வெளியே செல்ல முடியாத நிலையிலே, அந்த மனிதன் கூறியவற்றை நாங்கள் அசட்டை செய்தோம் என்று ஜனங்கள் மனவருத்தப்பட்டார்கள். மனவருத்தத்தினால் அவர்களுக்கு பலன் ஏதும் கிடைக்கவில்லை. ஆயத்தப்பட வேண்டியநாட்கள் முடிந்தது. வெளியிலோ காரிருளும், பெருங் காற்றும், அடை மழையுமாக இருந்தது. இரவு கடந்து, அந்த ஊராருக்கு உதவி வருமுன்னரே, அங்கே பேரழிவு ஏற்பட்டது. இவ்வண்ணமாகவே, இந்த உலகிலே மனிதர்கள் நடமாடமுடியாத காரிருள் நிறைந்த நாட்கள் வருகின்றது. ஆனாலும் மனிதர்கள் தேவனாகிய கர்த்தரின் வார்த்தையை கேட்டும் அதை அசட்டை செய்கின்றார்கள். உலகம் உருவாகி பல ஆயிரம் வருடங்கள் கடந்துவிட்டது சகலமும் சிருஷ்டிப்பின் தோற்ற முதல் இருந்தவிதமாகவேயிருக்கிறதே என்று கூறி, அழிவு வாசல்படியில் வரும்வரைக்கும் மனிதர்கள் தங்கள் இருதயங்களை கடினப்பபடுத்திக் கொள்ளுகின்றார்கள் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. பிரியமானவர்களே, உலகத்தின் முடிவைக் குறித்த இந்த மெய்யான வார்த்தைகள் எனக்கும் உங்களுக்கும் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருகின்றது. தேவ கிருபையின் நாட்களிலே நாம் வாழ்ந்து வருகின்றோம். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள் நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே. ஆகையால், மற்றவர்கள் தூங்குகிறது போல நாம் தூங்காமல், விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்." தேவ எச்சரிப்பின் சத்தத்தைக் குறித்து எச்சரிக்கையுள்ளவர்களாயிருங்கள்.

**மத்தேயு 24:42**

**உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்.**

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள தேவனே, உம்முடைய நாளுக்கென்று கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே உம் சந்நிதியில் காணப்படும்படி பிரசாமுள்ள மனக் கண்களை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிருபையின் நாட்கள்

ஒரு கிராமத்திலே வசித்து வந்த மனிதர்கள் மேற்கத்தைய வல்லரசு நாடொன்றைப் பற்றிய காரியங்களை செய்திகள் வாயிலாக மட்டுமே கேள்விப்பட்டிருந்தார்கள். ஒரு நாள் ஒரு செயற்திட்டத்தை நடத்துவதற்காக குறிப்பிடப்பட்ட மேற்கத்தைய நாட்டிலிருந்து, அந்த கிராமத்திற்கு ஒரு பிரதிநிதி வந்திருந்தார். அவர் பிறந்த நாளிலிருந்து அந்த நாட்டிலே வாழ்ந்தவராகையால் அந்த நாட்டை குறித்த காரியங்களைப் பற்றி மிகவும் தெளிவாக அந்த கிராம மக்களுக்கு எடுத்துரைத்தார். அவர் அந்த நாட்டிலிருந்து வந்தபடியால் அந்த நாட்டைக் குறித்து திட்டமாக அறிந்திருந்தார். அது போலவே பரலோகத்திலிருந்து இறங்கி வந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஒருவரே பரலோகத்தைக் குறித்து திட்டமாக அறிந் திருந்தவராகையால் அதைக் குறித்து விளக்கிக் கூறியதாவது: இந்த உலகிலே சுகபோகமாக வாழ்ந்து வந்த செல்வந்தன் ஒருவன், விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அனு தினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான். அவன் வாசல்படியிலிருக்கும் ஏழை மனிதனாகிய லாசரு என்பவன் செல்வந்தனின் மேஜையிலிருந்து விழுந்த துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான். நாட்கள் சென்று இருவரும் மரித்தார்கள். அந்தத் ஏழை மரித்து, தேவதூதரால் பரிசுத்தவான்களிருக்கும் இடத்திற்கு கொண்டுபோய் விடப்பட்டான். செல்வந்தனும் மரித்து பாதாளத்திலே வெகுவாய் வேதனைப்படுகிறபோது, நரகம் என்று ஒரு இடம் இருக்கின்றது என்பதையும் கண்டு கொண்டான். லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும் என்று வேண்டினான். இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என அவனுக்கு பதில் கூறப்பட்டது. உயிரோடிக்கும் சகோதரர்களுக்கு இந்த உண்மையை அறிவிக்க லாசருவை மறுபடியும் அனுப்ப வேண்டும் என்று வேண்டினான். உலகிலிருக்கும் தேவ ஊழியர்களுக்கு உன் சகோதரர்கள் செவிகொடுக்காவிடில், இங்கிருந்து போகின்றவர்களுக்கும் செவிகொடார்கள் என்று அவனுக்கு கூறப்பட்டது. பிரியமானவர்களே, உணர்வுள்ள இருதயத்தோடே கொடுக்கப்பட்ட கிருபையின் நாட்களை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்.

**எபேசியர் 5:16**

**நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்.**

**ஜெபம்**: நீதியின் தேவனே, கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவ கோபாக்கினை வரும் காலம் நெருங்குகின்றது என்பதை உணர்ந்து, கிருபையின் நாட்களை பிரயோஜனப்படுத்தும்படி வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தருடைய நாளுக்காக காத்திருங்கள்

**2 பேதுரு 3:12**

**தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்**

தேசிய மட்டத்தில் நடத்தப்படும் பல்கலைகழக நுழைவிற்கான உயர்தர பரீட்சையின் நாள் முன்குறிக்கப்பட்டிருந்தது. உயர்தர வகுப்பில் படிக்கும் மாணவர்களில் ஒரு சிலர் நண்பர்களோடு சேர்ந்து விளையாடுவதையும் வீணாக நேரங்களை விரயமாக்குதலையும்விட்டுவிட்டு மிகவும் சிரத்தையுடன் பாடங்களை படிக்க ஆரம்பித்தார்கள். வேறு சிலர், இன்னும் பத்து மாதங்களுக்கு மேல் உண்டு, கொஞ்சம் (fun) உல்லாசமாக இருப்போம் என்று காலத்தை விரயப்படுத்த ஆரம்பித்தார்கள். இன்னும் சிலர், தங்கள் சோம்பேறித் தனத்தினால் எப்போதும் சாப்குப் போக்குகளை சொல்லிக் கொண்டே இருந்தார்கள். யார் எப்படியாக இருந்தாலும், அந்தப் பரீட்சையானது முன்குறித்த நாளிலே நடைபெறும். அதில் எந்த மாற்றமும் இல்லை. எப்படியாயிருப்பினும் அந்த பரீட்சையின் முடிவுகள் தெரியவரும் நாளிலே ஒவ்வொருவரும் தங்கள் பிரயாசத்தின் பலனை அறுப்பார்கள். ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும், ஒவ்வொரு சமயமுமுண்டு என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. அதுபோலவே, கர்த்தருடைய பெரிதும் பிரகாசமுமான நாள் ஒன்று உண்டு. அந்த நாளுக்காக ஆயத்தப்படும்படிக்கான காலம் இதுவே. ஒரு வேளை, இந்த உலகிலே ஒரு பரீட்ச்சைக்கான நாளை தவறவிட்டால், அடுத்த வருடத்திலே அந்த பரீட்சையை எடுத்துக்கொள்ளலாம். “இந்த பஸ் வண்டியை தவற விட்டால் அடுத்த பஸ் வண்டியில் ஏறிக் கொள்வோம்” என்று மனிதர்கள் கூறிக் கொள்வார்கள். கர்த்தருடைய நாளிலே அந்தப் பேச்சுக்கே இடமில்லை. அது கடைசி நாள். ஆனால் வாழ்நாட்களிலே எத்தனையோ தவறுகளை மனிதர்கள் விட்டாலும், அதிலிருந்து மனந்திரும்பி, தங்கள் வாழ்க்கையை சரி செய்து கொள்வதற்கு எண்ணற்ற சந்தர்ப்பங்களையும் நாட்களையும் தேவனாகிய கர்த்தர் கிருபையாய் கொடுத்திருக்கின்றார். ஆனால் தேவனாகிய கர்த்தரை அறிந்த மனிதர்கள் கூட இந்நாட்களிலே கர்த்தருடைய பெரிதான நாளைக் குறித்து எண்ணமற்றவர்களாக வாழ்ந்து வருகின்றார்கள். யார் எப்படியாக இருந்தாலும் கர்த்தருடைய நாள் சீக்கிரமாய் வருகின்றது. அந்த நாளை பிதா ஒருவரே அறிவார். கர்த்தருடைய பெரிதான நாள் வரக் காத்திருக்கின்ற நீங்கள், கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஆயத்தப்படுங்கள்.

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, சகல எண்ணங்களையும் சகல செய்கைகளையும் நியாயந்தீர்க்குங்காலம் இனி இருக்கிறபடியால் கருத்துடன் உம்முடைய நாளுக்காக காத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆதியில் செய்த கிரியைகள்

ஆதியிலிருந்த அன்பு (first love) உங்களில் நிலைத்திருக்கின்றதா? அதில் பெருகியிருக்கின்றீர்களா? அல்லது குறைவுற்றிருக்கின்றீர்களா? ஆதியிலிருந்த அன்பு என்றால் என்ன? ஆரம்ப நாட்களிலே இருந்த அன்பு. புதிதாக திருமணமாகிய தம்பதிகள் ஒருவரை ஒருவர் ஓர் உடலும் ஈருயிருமாய் நேசிக்கின்றார்கள் என்று சொல்லிக் கொள்வார்கள். ஆனால் அந்த அன்பின் பிணைப்பு வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்வுகளினால் சோதிக்கப்படும் போது, சிலர் அன்பிலே இன்னும் பிணைக்கப்படுகின்றார்கள் வேறு சிலரின் அன்பு தணிந்து போய்விடுகின்றது. இந்த சம்பவத்திலே கணவன் மனைவி ஆகிய இருவருமே தவறிப் போகக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. நாங்கள் தேவனற்றவர்களும், பாவிகளுகமாக இருந்த வேளையிலே நாங்கள் அன்பு செய்யபடத்தக்கவர்களாக இருக்கவில்லை. அந்த வேளையிலே, பிதாவாகிய தேவன்தாமே முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தார். எங்கள் மேலிருந்த ஆக்கினையை நீக்கி, தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நிலையான ராஜ்யத்திற்கு நம்மை பங்காளிகளாக மாற்றினார். தம்முடைய ஆவியானவரை எங்களுக்குத் தந்தார். அந்த அன்பை ருசிபார்த்த ஆரம்ப நாட்களிலே, தேவனுக்காக எதையும் செய்வேன் என்ற வைராக்கியமும், மிகுந்த வாஞ்சையுள்ளவர்களாகவும் நாங்கள் தேவனை அன்பு செய்தோம். அந்த அன்பானது சூழ்நிலைகளால் சோதனைக்குட்படுத்தப்பட்ட போது பலர் ஆதி அன்பை விட்டுவிலகி விடுகின்றார்கள். மேற்கூறிய கணவன்-மனைவி உறவில் இருவரும் தவறிப் போகலாம் ஆனால் எங்களை அன்பு செய்த தேவன் என்றும் மாறாதவராக இருக்கின்றார். நாங்கள் ஆதி அன்பிலிருந்து விலகிப் போகும் போது எங்களில் நாங்கள் காணக்கூடிய அறிகுறிகள் என்ன? அவற்றுள் இலகுவாக நாங்கள் அறிந்து கொள்ளக்கூடியவைகளாவன: வேதம் வாசிப்பதும், ஜெபிப்பதும் குறைந்து போய்விடும், சபைகூடி வருவதற்கு சாக்குப் போக்குகளை கூறுதல் (முறுமுறுப்பு) போன்றவைகளே. ஆதி அன்பைவிட்டு விலகுவதற்கான காரணங்களை நாங்கள் ஒவ்வொருவரும் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். நாங்கள் எங்கே வழி தவறிச் சென்றோம் என்பதை அறிந்து, மனந்திரும்பி, ஆரம்ப நாட்களில் நீங்கள் செய்த கிரியைகளை மறுபடியும் செய்ய வேண்டும்.

**வெளிப்படுத்தல் 2:5**

**நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக**

**ஜெபம்:** இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்த எங்களை உம்முடைய பிள்ளைகளாய் மாற்றினீர். மறுபடியும் பழைய வாழ்விற்கு திரும்பாதபடி காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**திங்கள் | தை 18** 📖 மாலை வாசகம் – 1 யோவான் 3:11 – 13

# இயேசு கிறிஸ்துவின் அன்பு

ஆறாம் வகுப்பு படிக்கும் போது, எனக்கு கணிதம் படிப்பித்த ஆசிரியர் என்னை அதிகமாக தண்டித்ததால் நான் கணித பாடத்தையே வெறுத்து விட்டேன் என்று ஒரு மனிதன் கூறிக் கொண்டான். அந்த மனிதன் கூறிய வற்றில் உண்மை இருக்கலாம் ஆனால் அவன் 30 வருடங்களுக்கு முன் நடந்த தனது விடயத்திலே இன்னும் தன் சிந்தையை சிக்க வைத்து தன்னை அந்த சூழ்நிலைக்கு அடிமையாக்கியுள்ளான். இப்படியாக மனி தர்கள் தங்கள் வாழ்க்கையின் பின்ன டைவுகளை மற்ற மனிதர்கள்மேல் போட்டுவிடுகின்றார்கள். அதில் ஓரளவி ற்கு உண்மை இருக்கலாம். ஆனால் அந்த சூழ்நிலையிலே தரித்து நின்று சுய அனுதாபத்திலே மூழ்கிவிடாதிரு ங்கள். எங்கள் மீட்பராகிய இயேசு இந்த உலகத்திற்கு வந்தபோது, அவர் எங்கே பிறந்தார்? எங்கே வாழ் ந்தார்? எப்படியாக சோதிக்கப்பட்டார்? அவரை எத்தனை பேர் பகைத் தார்கள்? எத்தனைபேர் இகழ்ந்தார்கள்? எத்தனைபேர் கொலை செய்யு ம்படி திட்டம் போட்டார்கள்? அவர் எங்கே மரித்தார்? என்பதை சிந்தி த்துப் பாருங்கள். இவைகளைக் குறித்து அவர் எப்போதாவது சுயஅனு தாபத்தை தேடியதுண்டா? முறு முறுத்ததுண்டா? இது என்ன ஓர் நிர்பா க்கியமுள்ள வாழ்க்கை என்று கூறியதுண்டா? அவர் எந்த வேளையிலும் மற்றவர்களுக்கு நன்மை செய்வதிலும், பிதாவின் சித்தத்தை நிறை வேற்றுவதிலும் ஆர்வமுள்ளவராக இருந்தார். பிரியமானவர்களே, இந்த உலகத்தை குறித்த உங்கள் எதிர்பாரப்பு என்ன? சற்று சிந்தித்துப் பாரு ங்கள். "உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிற தற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்." என்று கர்த்தரா கிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே ஆச்சரியப்படாதிருங்கள். தேவ னுடைய அன்பை ருசிபார்க்க உங்களுக்கு தேவன் கிருபை செய்திரு க்கின்றார். உங்களை துன்புறுத்துகின்றவர்களின் இருதயம் தேவ அன்பை அறியாததினால், தன் சகோதரனைப் பகைத்த காயீனைப் போல மாறி விடுகின்றார்கள். பதிலடியாக நீங்கள் அவர்களை பகைப்பீர்களாக இரு ந்தால், கிறிஸ்துவின் அன்பு உங்களில் வாசமாயிருக்காது. சிலுவையில் தொங்கும் தறுவாயிலும் இயேசு தம்மை துன்பப்படுத்துகின்றவர்கள் தாம் செய்வது இன்னதென்று அறியாமல் செய்கின்றார்கள் என்று பிதா விடம் கூறினார். இயேசு கிறிஸ்துவின் அன்பு உங்களில் நிலைத்திரு ந்தால், அவரைப் போல நீங்களும் உங்களை துன்பபப்படுத்துகின்றவர் களை மன்னியுங்கள்.

**யோவான் 15:9**

**இயேசு சொன்னார்:என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்.**

**ஜெபம்:** மன்னிக்கின்ற தேவனே, என் பாவங்களை கிருபையாய் மன்னித்தவரே, அதைப் போல நானும் மற்றவர்களுடைய தப்பிதங்களை மனித்துவிட உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**செவ்வாய் | தை 19** | 📖 மாலை வாசகம் – லூக்கா 6:43 – 44

# கனிகொடுக்கும் வாழ்க்கை வாழுவோம்

ஒரு கிரமாத்திலே இயங்கி வந்த முதியோர் இல்லம் ஒன்றிற்கு, அரசாங்கத்தின் அனுசரணையுடன், அருகிலிருந்த பொலிஸ் காவல் பிரிவின் நிலையத்திலிருந்து மின்சார இணைப்பு ஏற்படுத்தப்பட்டது. சில கிழமைகளுக்கு பின், ஒரு நாள் இராத்திரியிலே, அந்த முதியோர் இல்லத்தில் வெளிச்சமில்லாமல் இருளாக இருந்தது. பொலிஸ் காவல் பிரிவில் மின்சாரம் இல்லை அதனால் இங்கே இருளாக இருக்கின்றது என அந்த முதியோர் இல்லத்தின் நிர்வாகி எண்ணினார். ஆனால் அவர் வெளியே சென்று பார்த்த போது பொலிஸ் நிலையத்தில் மின்சாரம் இருப்பதை கண்டு கொண்டார். மறு நாள் காலையிலே, பொலிஸ் நிலையத்தோடு இருக்கும் மின்சார இணைப்பு அறுந்திருப்பதை கண்டு கொண்டார்கள். இந்த சம்பவத்தோடு எங்கள் வாழ்க்கையை ஒப்பிட்டு பார்ப்போம். "நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது." என ஆண்டவர் இயேசு கூறியிருக்கின்றார். நாங்கள் இயேசுவோடு இணைக்கப்பட்டு அவரில் நிலைத்திருந்தால், அவருடைய வாழ்விலுள்ள திவ்விய சுபாவங்கள் எங்களிலும் வெளிப்பட வேண்டும். அப்படியாக எங்கள் வாழ்வில் திவ்விய சுபாவங்கள் வெளிப்படாமல், பகை, வன்மம், கசப்பு, பிரிவினைகள் வெளிப்பட்டால் நாங்கள் எங்கள் இணைப்பை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஒரு வேளை வெளியே இருப்பவர்களுக்கு எங்கள் வாழ்க்கை பரிசுத்தம் போல தெரியலாம். ஆனால் தங்கள் இருதயத்தில் என்ன இருக்கின்றது என அவரவர்களே அறிந்திருக்கின்றார்கள். இயேசுவும் அதை அறிவார். இயேசு மெய்யான ஒளியாக இருக்கின்றார். நாங்கள் அவரில் நிலைத்திருந்தால் அந்த ஒளி எங்கள் வாழ்க்கையின் செய்கையினால் வெளிப்பட வேண்டும். ஒளிக்குப் பதிலாக இருள் எங்கள் வாழ்க்கையில் இருக்குமென்றால் எங்கள் இணைப்புக் குறித்து நாங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். தம்மிடத்தில் வருகின்ற எவரையுமே புறம்பே தள்ளாத தேவனிடத்தில் திரும்புங்கள். அவர் உங்களை வழிநடத்துவார்

**யோவான் 15:4**

**என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன் கொடியானது திராட்சச்செடி யில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்.**

**ஜெபம்**: உன்னதமான தேவனே, உம்முடைய திருக்குமாரனாகிய இயேசுவிலே இருந்து திவ்விய சுபாவங்கள் எப்போதும் என்னில் வெளிப்படும்படிக்கு என்னை நாளுக்கு நாள் தூய்மைப்படுத்தி வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எப்படி மன்னிப்பது?

வீட்டை எப்படி சுத்தமாக வைத்திருப்பது? சமையலறையை எப்படி சுத்தம் செய்வது? குளியலறையிலிருக்கும் அழுக்கை எப்படி நீக்கிவிடுவது?என்பதைப்பற்றிய அநேக விளம்பரங்களை நாங்கள் பார்க்கின்றோம். சிலவேளைகளிலே, சுத்தமாய் வைத்திருக்க விரும்புகின்றவர்கள் எங்கே எப்படி ஆரம்பிப்பது என்பதைக் குறித்து தெளிவில்லாதிருக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு. அது போலவே எங்கள் உள்ளான மனிதனில் குடிகொண்டிருக்கும் மாம்சத்தின் கிரியைகளாகிய பகை, வன்மம், கசப்பு, பிரிவினை போன்றவைகள் பெரும்பாலானோரின் வாழ்வை மேற்கொண்டிருக்கின்றது. அதிலிருந்து விடுதலையடைய வேண்டும் என்பதின் அவசியத்தை அறிந்திருந்தாலும், நாட்பட்ட அழுக்குகளை எமது உள்ளத்திலிருந்து அகற்றிவிடும்படி எங்கே எப்படி ஆரம்பிப்பதென்பதை அறியாமலிருக்கின்றார்கள். முதலாவதாக நாங்கள் விசுவசித்து அறிக்கையிட வேண்டிய உண்மையாவது: இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். இரண்டாவதாக: எங்கள் உள்ளத்திலிருக்கும் கசப்பு யாரால் உண்டானது? எந்த மனிதனுடைய பெயரைகூட உச்சரிப்பதற்கு நாங்கள் விரும்பமில்லாதவர்களாக இருக்கின்றோம் என்பதை அறிந்து, அவைகளை உங்கள் ஜெப குறிப்பு புத்தகத்திலே பட்டியல் படுத்துங்கள். உங்கள் அறைவீட்டுக்குள் முழங்கால்படியிட்டு, “என் பிதாவாகியே தேவனே, என்மேல் அன்பு கூர்ந்து எனக்காக பலியாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே இவர்களை ஆசீர்வதிக்கின்றேன்” என்று அவர்களின் பெயர்களை கூறி ஜெபியுங்கள். முதல் தடவை அப்படி செய்யும்போது அது கருத்தற்றது போல இருக்கும். இப்படி தினமும் செய்யுங்கள் சில நாட்களுக்குள், உங்களை அறியாமல், உங்களிலிருந்த பகை உணர்வு அகன்று போவதையும், மன்னிக்க வேண்டும் என்னும் திவ்விய சுபாவம் உங்களுக்குள் பெருகுவதையும் அறிந்து கொள்வீர்கள். இது எனக்கு கடினமாக செயல் என்று எண்ணாமல் இன்றே ஆரம்பியுங்கள். உங்களுக்குள் வாசம் செய்யும் தூய ஆவியானவர் உங்களுக்கு உதவி செய்வார்.

**மத்தேயு 5:44**

**இயேசு: உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.**

**ஜெபம்:** இரக்கம் நிறைந்த தேவனே, என் உள்ளத்தில் பகையை வளர்க்காமல், அவற்றை உம் சமுகத்தில் அறிக்கையிட்டு, என்னை துன்பப்படுத்துகின்றவர்களை நான் ஆசீர்வதிக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**வியாழன் | தை 21** | 📖 மாலை வாசகம் – சங்கீதம் 55:22

# மன ஆறுதலை குலைத்துப் போடுபவைகள்

வீட்டிலிருக்கும் பழைய பொருட்களாகிய, இரும்பு, போத்தல், பித்தளை போன்றவற்றை கொடுத்தால், அதற்கு பதிலாக பணம் அல்லது உபயோகமுள்ள பொருட்கள் கொடுக்கப்படும் என்று சொல்லும் முகவர்கள் தெருவழிகளிலே செல்வதை நாம் அறிந்திருக்கின்றோம். ஆனால் ஒரு மனிதன் தன் வீட்டிலிருக்கும் உபயோகமற்ற இரும்பு பொருளொன்றானது, அது என் பாட்டனாருடையது, அது எங்கள் பரம்பரை சொத்து எனவே அதை கொடுக்க முடியாது என்று வைத்திருந்தான். எனினும் அவனால் அதை அவனுக்கு உபயோகமான பொருளாக மாற்றமுடியவில்லை. இதற்கொத்ததாகவே, உங்களிடமிருக்கும் மாம்சத்தின் கிரியைகளாகிய பெருமை, சமுக அந்தஸ்து, அகங்காரம், கசப்பு போன்றவற்றை என்னிடம் கொடுங்கள், அவைகளுக்குரிய கிரயத்தை செலுத்தி, உங்களுக்கு சமாதானத்தை தருவேன் என்று ஆண் டவரும் இரட்சகருமாகிய இயேசு அழைக்கின்றார். ஆனால் ஒரு மனிதன் நான் எல்லாவற்றையும் விட்டுவிடுவேன் ஆனால் தலைமுறை தலைமுறையாக நாங்கள் பேணிப் பாதுகாக்கும் எங்கள் குடும்பத்தின் சமுக அந்தஸ்தை நாங்கள் விட்டுவிடமாட்டோம். அது எங்கள் குடும்ப கௌரவம். எங்கள் பரம்பரை சொத்து என்று அதைப் பற்றிக் கொள்பவனாக இருந்தால், அவன் ஆன்மீக சமாதானத்தை பெற்றுக் கொள்ளப் போவதில்லை. தேவனுடைய சமாதானமும், இந்த உலகத்தின் பெருமையும் ஒரே இடத்தில் இருப்பதில்லை. பிரியமானவர்களே, சிந்தியுங்கள். இன்று தேவ சமாதானத்தை உங்கள் இருதயத்தில் காத்துக் கொள்ள முடியாமல் உங்களை அங்கலாய்க்க வைக்கும் மாம்சத்தின் கிரியைகள் என்ன என்பதை ஆராய்ந்து பாருங்கள். “தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும் என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.” என்று அறிக்கையிடுங்கள். வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு. தேவனுக்கு முன்பாக உங்களை தாழ்த்தி, உங்கள் மனப்பாரங்களை அவர்மேல் வைத்து விடுங்கள். அவர் உங்களுக்கு மனஆறுதலை தந்தருள்வார்.

**யாக்கோபு 3:14**

**உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமைபாராட்டாதிருங்கள்.**

**ஜெபம்:** பரிசுத்த வாழ்வு வாழும்படி அழைத்தவரே, எந்த மனிதனுடைய கிரியைகளாலும் நான் என் இருதயத்தை மாசு படுத்தாதபடிக்கு தெளிந்த புத்தியை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கொடுப்பதன் மேன்மை

ஐயா எத்தனை வருடங்களாக ஊழியங்களை உங்கள் பொருளால் தாங்கி வருகின்றீர்களே, உங்களுடைய மனசு பெரியது என்று ஒரு பெரியவரைப் பார்த்து ஒரு மனிதன் கூறினான். அதற்கு அந்த பெரியவர்: தம்பி, நான் ஊழியங்களை தாங்கி நடத்தவில்லை, தேவனே என்னைத் தாங்கி நடத்துகின்றார். என்னிடத்தில் தேவன் தந்திருப்பதை நான் என் விருப்பப்படி விரயம் செய்யாமல், ஞானமாக செலவு செய்யும்படிக்கு தேவன் என்னை வழிநடத்தி வருகின்றார். நான் அவர் கரத்திலிருக்கும் அப்பிரயோஜனமான கருவி என்று அவர் பதில் கூறினார். ஆண்டவர் இயேசு இந்த உலகிலே இருந்த நாட்களிலே, ஏரோது ராஜாவின் காரியக் காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்து கொண்டுவந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள். (லூக்கா *8:1-3*). இன்று மூன்றாம் உலக நாடுகளிலே, அநேக ஊழியர்கள், வறுமைகோட்டிற்குள் வாழும் மக்கள் மத்தியிலே ஊழியம் செய்து வருகின்றார்கள். அவ்விடங்களிலே தங்கள் அன்றாட தேவைகளை சந்திப்பதற்கு ஊழியர்களும், பல விசுவாசிகளும் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். தேவனுடைய ராஜ்யதிற்கு பங்காளிகளாக அழைக்கப்பட்ட நாங்கள், இந்த விஷயத்திலே தாராள மனதுடையவர்களாகவும், பரந்த நோக்குடையவர்களாகவும் இருக்க வேண்டும். தேவனுடைய ராஜ்யத்திலே, பிதாவினுடைய சித்தம் செய்கின்றவர்களே இறுதியில் பங்கடைவார்கள். எனவே, அவருடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்திற்காக மூன்றாம் உலக நாடுகளிலே பல சிரமங்கள் மத்தியிலே பாடுபடும் ஊழியர்களுக்கும் விசுவாசிகளுக்கும் உங்கள் உதவிக்கரங்களை நீட்டுங்கள். அப்படிப்பட்ட சந்தர்ப்பம் ஏற்பட்டால், அதாவது, நீங்கள் இன்னுமொருவருக்கு உதவி செய்யக்கூடிய நிலையிலே தேவன் உங்களை வைத்திருந்தால், தேவன் முன்னிலையிலே உங்களை தாழ்த்துங்கள். தேவனுடைய ராஜ்யம் கட்டப்படுவதற்கு ஒத்தாசையாக இருக்கும்படிக்கு தேவன் எனக்கு பொருளையும், மனதையும் தந்திருக்கின்றார் என்பதற்காக அவரை மகிமைப் படுத்துங்கள்.

**மத்தேயு 10:42**

இயேசு சொன்னார்: சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒருகலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

**ஜெபம்:** கிருபை நிறைந்த தேவனே, நான் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, மனப்பூர்வமாய் உம்முடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்திற்காக கொடுப்பதன் மேன்மையை உணரச் செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ ஆவியின் வழிநடத்துதல்

வாலிபப்பிராயாயத்தை அடையும் தனது மகன், இந்தத் தவணை முடிவில், மத்திய பிரிவில் தன் படிப்பை முடித்து, பாடசாலையின் மேற்பிரிவுக்கு கல்வி கற்க செல்லப் போகின்றான் என்பதை நினைக்கும் போதெல்லாம், அவன் தாயானவள், "தேவனே, என் மகனுக்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை கொடுத்து, அவர் அவனை நடத்திச் செல்லும்படி கிருபை செய்யும்" என்று ஜெபித்துக் கொண்டாள். இந்த சம்பவத்தை மையமாக வைத்து, தேவனை விசுவசிப்பவர்களின் நிலையையும் அதிலே எங்கள் நிலைமை எப்படி இருக்கின்றது என்பதையும் ஆராய்ந்து பார்ப்போம். பொதுவாக மனிதர்கள் தங்கள் பிள்ளைகள் பிறந்த நாள் முதல் அவர்கள் வைத்தியர்களாக, பொறியியளாலராக பெரிய கல்விமான்களாக வரவேண்டும் என்றே வேண்டிக் கொள்கின்றார்கள். அதாவது, நன்றாக கற்று, நல்ல வேலையை எடுத்து, கைநிறைய உழைத்தால் எங்களைப் போல கஷ்டப்படத் தேவையில்லை என்று எண்ணிக் கொள்கின்றார்கள். அப்படி செய்வதினால் ஒருவேளை இந்த உலகத்தில் அவர்களது பொருளாதார நிலைமை செழிப்பாக இருக்கலாம் ஆனால் இதனால் அவர்கள் தேவனுடைய சித்தம் செய்கின்றார்கள் என்பது பொருள் அல்ல. ஒரு பிள்ளை படித்து, ஆசிரியராகவோ, கணக்காளராகவோ, தொழில்நுட்ப நிபுணராகவோ, வைத்தியராகவோ, பொறியியளாலராகவோ, வக்கீலாகவோ, வேறு வேலைகளை செய்பவர்களாகவோ அல்லது போதகராகவோ வரலாம். ஆனால் அவர்கள் பிறந்த நாளிலிருந்து தேவனோடு நடக்கின்றார்களா? தேவனுக்கு பயப்படும் பயம் அவர்கள் உள்ளத்தில் இருக்கின்றதா? அப்படி தேவ பயம் இருந்தால், ஊக்கமாக வேதத்தை படிக்கின்றார்களா? ஜெபம் செய்கின்றார்களா? தவறாது ஆலயத்திற்கு செல்கின்றார்களா? அவர்கள் வளர்ந்து வரும்போது தேவனை அறிகின்ற அறிவிலே வளர்ந்து பெருகின்றார்களா? தேவனுக்கென்று கனி கொடுக்கின்றார்களா? பிரியமானவர்களே, அந்த தாயானவளின் வாஞ்சையைப் பாருங்கள். தன் மகன் படித்து பெரிய பட்டதாரியாக வர வேண்டும் என்று கேட்கவில்லை மாறாக தேவ ஆவியானவர் தன் மகனை நடத்த வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள். தேவ ஆவியானவரின் வழிநடத்துதலின் பாதையிலே, இந்த உலகிலே தேவனுடைய சித்தம் நிறைவேறும், அவ்வாழ்க்கையில் வெற்றியும் சமாதானமும் இருக்கும், மறுஉலகிலே நித்திய வாழ்வை தேவன் தந்தருள்வார்.

**நீதிமொழிகள் 22:6**

**பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து. அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.**

**ஜெபம்:** வழிநடத்துகின்ற தேவனே, எங்கள் அறிவு குறைவுள்ளது, நீர் எல்லாவற்றையும் அறிந்தவர். உம்முடைய வழிநடத்துதலின் மேன்மையை உணர்ந்தவர்களாக உமது வழியில் நடக்க எங்களுக்கு கிருபை செய்வீராக. இட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# முன்னனுபவம்

ஒரு தேசத்திலே வாழ்ந்து வந்த மனிதன், தன் இளவயதிலிருந்தே தன் சொத்துக்களை பெருக்கும்படிக்கு, பல முதலீடுகளை செய்து, பல வீடுகளுக்கும் காணிகளுக்கும் சொந்தக்காரனானான். பல தலைமுறை களுக்குரிய செல்வம் அவனிடமிருந்தது. ஒரு இரவிலே, அந்த தேச த்தில் ஏற்பட்ட கொடிய பூகம்பத்தினால், வீடுகள், வளவுகள், வங்கிகள், கட்டிடங்கள், வியாபாரங்கள் யாவும் சில நிமிடங்களுக்குள் இருந்த இடம் தெரியாமல் முற்றாக அழிந்து போய் விட்டது. அவர்கள் வீடுகள் வளவுகள் இருந்த இடம், அவைகளின் அரச உறுதிகள், வங்கிக் கணக்கின் விபரம், அவர்கள் சேர்த்து வைத்த விலையுய ர்ந்த பொருட்கள், தங்கள் பொருட்க ளுக்கு போடப்பட்டிருந்த காப்புறுதி யாவும் இடம் தெரியாமல் அழிந்து போயிற்று. இப்படிப்பட்ட நிகழ்வு கள், இயற்கை அனர்த்தங்களால், கட்டம் கட்டமாக இந்த உலகின் பல இடங்களிலே நடைபெறுகின்றதை நாங்கள் கேள்விப்பட்டு வருகின்ற றோம். இவை யாவும் இந்த உலகத்தின் அழிவுக்கு ஒரு முன்னனுபவம் (foretaste). இதனால் பல செல்வந்தர்கள் சர்வதேச மட்ட த்திலே முத லீடு செய்து வருகின்றார்கள். அதாவது தாங்கள் வசிக்கும் தேசத்தில் பின்னடைவு ஏற்பட்டாலும், புற தேசத்திலே தங்கள் பொருட்கள் இருக் கும் என்று எண்ணுகின்றார்கள். “வானமும் பூமியும் ஒழிந்து போம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை.” என்று கர்த்தர் இயேசு கூறியி ருக்கின்றார். தற்போது பூமியில் ஏற்படும் அழிவுகளையே நாங்கள் கட் டம் கட்டமாக அன்றாடம் கண்டு வருகின்றோம். பூமி மாத்திரமல்ல வான மும், அதிலுள்ள கிரகங்கள், சுடர்கள் யாவும் அழிந்து போகும் ஒரு நாள் உண்டு. இந்த பூமியிலே அதிகபடியாக சேர்த்து வைத்தவர்கள் அதிக நோவை அடைந்து கொள்வார்கள். இந்த பூமியிலே தங்களை ஞானமுள்ள முதலீட்டாளர்கள் என்று கருதிக் கொண்டவர்கள் தங்களை விட மதியீனர்கள் இல்லை என்று அழுது புலம்பும் ஒருநாள் வருகின் றது. (மத்தேயு 24:30). இவைகள் எல்லாம் முன்னதாகவே எங்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அந்தகார இருளிலே வாழ விரும்புகின்றவ ர்கள், இந்த வார்த்தைகளை அசட்டை செய்கின்றார்கள். அழிந்து போகி ன்றவைகள் இப் பூமிக்குரியவைகள், அழியாதது தேவனுடைய வார் த்தை என்பதை நாங்கள் அறிந்திருப்பதினால் அழியாத தேவ வார்த்தை யின்படி வாழக்கடவோம்.

**வெளி 1:7**

பூமியின் கோத்திரத்தா ரெல்லாரும் அவரைப் பா ர்த்துப்புலம்புவார்கள். அப் படியே ஆகும், ஆமென்.

**ஜெபம்**: முடிவின் நாளையும் அந்த நாழிகையையும் அறிந்தவராயிரு க்கின்ற பிதாவே, அந்த நாளிலே நாங்கள் புலம்புகின்றவர்களாக இராத படிக்கு இந்த நாட்களிலே உம் வார்த்தையின்படி வாழ கிருபை செய்வீ ராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம்

ஒரு குழந்தையானது தன் தகப்பனார் தனக்கு வாங்கிக் கொடுத்த ஒரு பொம்மையை எப்போதும் தன் கையிலே வைத்திருந்தது. படுக்கைக்கு சென்றாலும், சாப்பிடச் சென்றாலும் அந்த பொம்மையானது தனக்கரு கிலில்லையென்றால் அது வீரிட்டு அழும், அந்த பொம்மையை அதனி டம் கொடுக்கும் வரைக்கும் அது தன் அழுகையை நிற்பாட்டமாட்டாது. அந்த பொம்மையானது அந்தக் குழந் தையின் மனதை கவர்ந்து கொண்டது. இன்று எங்கள் வாழ்க்கையை கவர்ந்து கொள்ளும் காரியங்கள் என்ன என் பதை ஆராய்ந்து பார்ப்போம். நாங்கள் யாருடைய ரசிகர்கள்? எதன்மேலே அல்லது எவர் மேலே எங்கள் ஆசை இருக்கின்றது? எதிலே எங்கள் ஓய்வு நேரங்கள் விரயமாகின்றது? யாருடன் எதைக்குறித்து அதிகமாக பேசுகின் றோம், எதை குறித்து அதிகமாக கேட் கின்றோம்? எதைக் குறித்து அதிகமாக வாசிக்கின்றோம்? எங்கள் அடி ப்படைத் தேவைகள் தவிர்ந்த வேறு எவைகளிலே எங்கள் பணம் அதிகமாக விரயமாகுகின்றது? இவைகளுக்கு உண்மை மனதுடன் நீங்கள் உங்கள் பதில்களை கூறுவீர்களாக இருந்தால், உங்கள் வாழ்க் கையில் உங்களை கவர்ந்த பொம்மை எது என்பதை நீங்களே அறிந்து கொள்ளலாம். பரலோக வாழ்க்கையின் முன்னனுபவம் (foretaste) இந்த உலகிலே எங்கள் உள்ளத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்றது. பூவுலகிலே நடக்கும் எந்த காரியத்தினாலே பரலோகத்திலே மகிழ்ச்சி உண்டாகின் றது என்று எப்போதாவது நீங்கள் சிந்தித்ததுண்டா? இந்த உலகத்திலே ஒரு மனிதனானவன் தன்னைத் தானே சோதித்தறிந்து, பாவங்களை உணர்ந்து, அவைகளிலிருந்து மனந்திரும்புகிறபோது, அதினிமித்தம் பரலோகத்தில் தேவனுடைய தூதருக்கு முன்பாக மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கின்றது. ஒருவரும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்றே இயேசு தம்மைப் பலியாக ஒப்புக் கொடுத் தார். இயேசுவை விசுவசித்து அவருடைய வார்த்தையின்படி வாழ்கின்ற யாவரும் அந்த நித்திய ஜீவனிலே பங்கடைகின்றார்கள். அந்த மனந்தி ரும்புதல் எங்கள் வாழ்க்கையில் உண்டானது போல, மற்றவர்களுடைய வாழ்க்கையிலும் உண்டாவதே ஒரு கிறிஸ்தவனின் வாழ்வின் சந்தோ ஷமாக இருக்க வேண்டும். காணாமற்போனதை கண்டுபிடித்த சந்தோ ஷம், இழந்து போனதை மீட்படையச் செய்யும் சந்தோஷம்.

**லூக்கா 15:7**

**இயேசு: மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிரு க்கும் என்று உங்களுக் குச் சொல்லுகிறேன்.**

**ஜெபம்:** காணாமற்போன என்னை தேடி வந்த தெய்வமே, உம்மை அறி யாமல், உம்மைவிட்டு தூரமாய் போய் தொலைந்திருக்கும் மனிதர்கள் உம்மை அறியவேண்டும் என்பதே என் ஆசையாக மாற கிருபை செய் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | தை 26

📖 மாலை வாசகம் – சங்கீதம் 1:1 – 6

# எங்களுடைய ஐக்கியம்

ஒரு வாலிபன், தன் வாலிப நாட்களிலே தம் நேரத்தை வீணடிக்கும் நண்பர்களோடு சேர்ந்து சுற்றித்திரிந்தான். அதைக் கண்ட அவன் தகப்பனானவர்: மகனே, உன் வழியை கர்த்தருடைய வார்த்தையின்படி காத்துக் கொள். தேவ வார்த்தையைவிட்டு தவறிப்போனால் நீ தவிக்க நேரிடும் என்று கூறினார். வாலிபன்: "அப்பா, இயேசு பாவிகளோடு உணவுண்டார், எனவே தவறி நடக்கின்றவர்களுடன் நான் சேர்ந்து, நானும் திரிகின்றேன் என்றான்" தகப்பனானவர்: மகனே, மீட்பராகிய இயேசு, பாவிகளை தேடிச் சென்றது உண்மை ஆனால் அன்றைய நாளுடன் அவர்கள் வாழ்விலே மீட்பு உண்டானது. அவர்கள் பழைய வாழ்க்கையைவிட்டு புதிய வாழ்க்கைக்கு திரும்பினார்கள். அவர், அவர்கள் யாவரையும் மன்னித்து "இனி பாவம் செய்யாதே" என்று எச்சரித்தார். பாவமறியாத பரமன் இயேசு குற்றவாளிகள் மத்தியிலே சிலுவையில் தொங்கினார். அவரைச் சூழ பரியாசக்காரர்கள் இருந்தார்கள். ஆனால் அவரோ எவரையுமோ பரியாசம் செய்யவில்லை. அவர் பாவிகளின் பாவங்களில் பங்கேற்கவுமில்லை. அதாவது அவர்களோடு சேர்ந்து அவர்களைப் போல பாவம் செய்யவில்லை. நற்செய்தியை அவர்களுக்கு கூறினார். அவர்களில் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் அவருக்குப் பின்சென்றார்கள். ஆனால் பாவ வாழ்க்கையை விட்டு மனந்திரும்ப விருப்பம் இல்லாதவர்கள் தங்கள் பாவத்திற்கு பின் சென்றார்கள். ஆனால் நீயோ, தங்கள் நேரத்தை விரயமாக்கி, பாவ வழிகளில் செல்லும் நண்பர்களோடு, போக்கும் வரத்துமாக இருந்து, அவர்களைப் போல பாவம் செய்கின்றாயே என்று பதில் கூறினார். பிரியமானவர்களே, பாவிகள், பரியாசக்காரர், துன்மார்க்கர் யாவரும் மனந்திரும்ப வேண்டும் என்ற வாஞ்சை நமக்கு எப்போதும் இருக்க வேண்டும், கிடைக்கும் சந்தர்ப்பங்களிலே அவர்களுக்கு நற்செய்தியை அறிவிக்க வேண்டும், அவர்களது மனக்குருட்டாட்டம் நீங்கும்படி தினமும் ஜெபிக்க வேண்டும். ஆனால் அவர்கள் மனந்திரும்பும்படி நாங்கள் அவர்களோடு சேர்ந்து அவர்களின் தவறான வழிகளிலே பங்கேற்போமானால் நாங்கள் மறுபடியும் இருளில் நடக்கின்றவர்களாக இருப்போம். எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும், குமாரனாகிய இயேசுவோடும் உண்டு. எனவே உங்கள் பரிசுத்த வாழ்வை காத்துக் கொள்ளுங்கள்.

**1 யோவான் 1:6**

நாம் அவரோடே ஐக்கியப் பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய்சொல்லுகிறவர்களாயிருப்போம்.

**ஜெபம்:** நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று கூறிய தேவனே, எந்த ஒரு காரணத்திற்காகவும் உம்முடைய கற்பனைகளைவிட்டு விலகாதபடிக்கு என்னை காத்துக் கொள்ளும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ நீதி நிறைவேறும்

**யாக்கோபு 1:20**

**மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே.**

தாம் இந்த உலகிற்கு வந்த நோக்கம் நிறைவேறுகின்ற வேளை வந்தது என்றும் மனிதகுலத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும் பாவ நிவாரண பலியாக தம்மைதாமே ஒப்புக் கொடுக்க வேண்டும் என்பதையும் இயேசு அறிந்திருந்தார். ஆனால், அவரை ஏற்றுக் கொள்ளாத மதத் தலைவர்களும், ஜனத்தின் மூப்பரும் இயேசுவை பிடிக்கும்படிக்கு பட்டயங்களோடும் தடிகளோடும் வந்தார்கள். அப்பொழுது இயேசுவோடிருந்தவர்களில் ஒருவன் கைநீட்டித் தன் பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனைக் காதற வெட்டினான். அப்பொழுது, இயேசு அவனை நோக்கி: உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள். நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா? அப்படிச் செய்வேனானால், இவ்விதமாய்ச் சம்பவிக்கவேண்டும் என்கிற வேதவாக்கியங்கள் எப்படி நிறைவேறும் என்றார். பிரியமானவர்களே, அன்று இயேசு தம்மை அவர்களிடம் ஒப்படைக்காவிட்டால் அவர்கள் அவரை கைது செய்திருக்க முடியாது. ஆனால் நாங்கள் மீட்படையும்படிக்கு வழியை உண்டு பண்ணும்படிக்கான பிதாவின் அநாதி தீர்மானம் தம்மில் நிறைவேற தம்மை ஜீவ பலியாக கொடுத்தார். அன்று இயேசுவினுடைய சீஷன் இயேசுவைக் காக்க பட்டயத்தை உருவியது போல, இன்றும் பல மார்க்கத்தார் தங்கள் மத நம்பிக்கைகளை காக்கும்படி தெருக்களிலே இறங்கி, பல வன்முறைகளில் ஈடுபடுகின்றார்கள். இயேசுவின் வழியை பற்றிக் கொண்டிருந்த, இயேசுவின் அப்போஸ்தலர்கள் இரத்த சாட்சிகளாக மரித்தார்கள். எங்கள் போராயுதங்கள் மாம்ச பெலன் அல்ல. அப்படியானால், சர்வ வல்லமையுள்ள தேவன் ஒரு வார்த்தையினால் இந்த உலகத்தை அழித்துப்போட வல்லவராக இருக்கின்றார். அறியாமையிலும், குருட்டாட்டத்திலும் வாழும் ஜனங்கள், தம்முடைய பிள்ளைகளை துன்புறுத்துவதை அறிந்திருந்தும், குருட்டாட்டத்திலே வாழும் தேவனையறியாதவர்கள் மீட்படையும்படி நீடிய பொறுமையுள்ளவராக இருக்கின்றார். எங்களுடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்காது. எனவே, உங்கள் உள்ளத்திலும், இல்லத்திலும், வேலையிலும், சபையிலும், தேசத்திலும் தேவனுடைய சித்தம் உங்களில் நிறைவேறும்படி இடங்கொடுங்கள். தேவ நீதி நிறைவேறும் காலம் சமீபித்திருக்கின்றது.

**ஜெபம்**: தேவ நீதி நிறைவேற இடங்கொடுங்கள் என்ற தேவனே, உம்முடைய அநாதி தீர்மானம் எங்களில் நிறைவேறும்படிக்கு நீடிய பொறுமையுள்ளவர்களாக இருக்கும்படிக்கு பெலன் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நோவுகள் எதினால் ஏற்பட்டது

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் குழப்பங்கள் ஏற்படு வதுண்டு. கடந்த ஆண்டிலே உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட குழப்ப ங்கள் எங்கே ஆரம்பித்தது? அவைகளை என் மனம் போன போக்கில் தீர்த்துக் கொண்டேனா அல்லது வேதவாக்கியங்களின் படி மேற்கொ ண்டேனா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். சில வேளைகளிலே, வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைக ளுக்கு முடிவு காண வேண்டும் என்று மாம்ச இச்சைகள் எங்களை மேற் கொள்ள இடங் கொடுத்துவிடுகின் றோம். அதாவது பிரச்சனைகள் ஏற் படும் போது, எங்கள் கோபம், வைரா க்கியம், சுயநீதி போன்றவை எங்கள் சிந்தைகளை மேற்கொள்ள இடங்கொடு த்து அதன்படி செயற்படுகின்றோம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலே மனித ர்கள், தங்கள் சுயநீதியை நியாயப்ப டுத்த ஏதாவது வேத வாக்கியங்கள் இருக்கின்றதா என்று தேடுகின் றார்கள். தங்களுக்கு சார்பாக யாராவது உடன்படுவார்களா என்று கலந் தாலோசனை செய்கின்றார்கள். முடிவிலே, தங்கள் மாம்ச சிந்தைக்கு இடங் கொடுத்து தங்கள் மனதிலே ஒரு தற்காலிகமான திருப்தியை அடைந்து கொள்கின்றார்கள். அவை பிசாசானவன் இருதயத்தில் விதை த்த வித்துக்கள் என்பதை மறந்து போய்விடுகின்றார்கள். ஏன் மனிதர்கள் இப்படியான சோதனைகளுக்கு திரும்பத் திரும்ப இலகுவாக இடங் கொடு க்கின்றார்கள்? இப்படிப்பட்ட பிரச்சனைகள் தோன்றுவதற்கு முன்னதா கவே, இவர்கள் பல நாட்களாக வேத வாசிப்பையும் அதன் தியானத் தையும் விட்டுவிட்டிருப்பார்கள். தினமும் ஜெபிப்பதை பல நாட்களுக்கு முன்னதாகவே விட்டிருப்பார்கள். பிரியமானவர்களே, தேவனுடைய வச னமே நம் கால்களுக்குத் தீபமும், நாம் செல்லும் பாதைக்கு வெளி ச்சமுமாயிருக்கின்றது. இந்தக் கிழமை நம்முடைய வீட்டிற்கு வெளி ச்சம் தேவையில்லை, நாங்கள் இருளிலே நடமாடுவோம் என்று ஒருவர் உங்களிடம் கூறினால் அவரைக் குறித்து என்ன சொல்லுவீர்கள்? பிரிய மானவர்களே, சத்திய வேதமே நம் ஆன்மீக விளக்கு. எனவே, உண ர்வுகளுக்கு இடங் கொடுக்காமல், அதை தினமும் படியுங்கள், தியானி யுங்கள், கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பி க்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானி யாக்குகிறதுமாயிருக்கிறது.

**சங்கீதம் 19:11**

**அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக் கப்படுகிறேன் அவைக ளைக் கைக்கொள்ளுகிற தினால் மிகுந்த பலன் உண்டு.**

**ஜெபம்**: உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள் என்று கூறிய தேவனே, மன வேதனையான நேரங்களிலே என் உணர்வுகளி ன்படி செயற்படாமல் உம்முடைய வேதத்தைப் பற்றிக் கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வெள்ளி | தை 29

📖 மாலை வாசகம் – யோவான் 15:4 –5

# வாழ்வின் மேன்மை என்ன?

இராஜாக்கள் அரசாண்ட காலத்திலே அவர்கள் இருந்த கோட்டைகளும் அரண்மனைகளும், அவர்கள் உபயோகித்த பொருட்களும், இன்று காட்சிப் பொருட்களாக நூதன சாலைகளிலே வைக்கப்பட்டிருக்கின்றது. பல நூற்றாண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்ட கட்டிடங்கள் இன்று தேசிய பாரம்பரிய சொத்துக்களாகவும் பேணிப் பாதுகாத்து வரப்படுகின்றது. இந்த உலகிலே இன்று பல நவீன கட்டிடங்களை நாங்கள் காண்கின்றோம். நவீன இடாம்பீகரமான மாளிகைகளை தாங்கள் குடியிருப்பதற்கென்றும் கட்டிக் கொள்கின்றார்கள். அதே வேளையிலே, மறுபக்கத்தில் ஏழை மக்கள் எளிமையான குடிசைகளிலே வாழ்ந்து வருகின்றார்கள். மாளிகைகளில் வாழ்ந்து வரும் குடும்பங்கள் தங்கள் வீட்டையும் அதிலுள்ள பொருட்களையும் குறித்து மேன்மை பாராட்டுகின்றார்கள். ஒரு குடும்பத்தின் மேன்மை என்ன? வீடும் அதிலுள்ள பொருட்களும் குடும்பத்தை ஐக்கியப்படுத்துமோ? அவைகளினாலே அங்கே நிம்மதி உண்டாகுமோ? இன்று வானுயர்ந்த ஆலய கட்டிடங்களை காண்கின்றோம். அவற்றுள் சில நாட்டின் பாரம்பரிய சொத்துக்களாகவும், உல்லாச பயணிகளை கவர்ந்து கொள்ளும் இடமாகவும் இருந்து வருகின்றது. ஒரு ஆலயத்தின் மேன்மை என்ன? அதன் வடிவமைப்பு அதன் மேன்மையாகுமோ? திரளாக ஜனங்கள் அங்கு செல்வதினால் அது ஆலயமாகுமோ? அங்கே ஜனங்கள் கூடி வரும் போது அவர்கள் மத்தியில் தேவனுடைய பிரசன்னம் அங்கு இல்லையென்றால் அந்த இடம் எவ்வளவு அழகாக இருந்தும் அதன் மேன்மை அற்பமே. எங்கள் உள்ளத்திலும், இல்லத்திலும், நாங்கள் கூடிவரும் ஆலயத்திலும் தேவன் எங்களோடிருப்பதே மேன்மையானது. காரியம் அப்படியாக இருந்தால் நாங்கள் எதைக் குறித்து மேன்மை பாராட்ட முடியும்? இன்று ஜனங்கள் ஆலய கட்டிடங்களையும், அதன் அழகையும், அங்கு செல்லும் மனிதர்களின் தொகையையும் ஆலயத்தின் வளர்ச்சி என்று கணக்கிடுகின்றார்கள். தேவ ஊழியராகிய மோசேயோடு இலட்சக்கணக்கான ஜனங்கள் இருந்தார்கள். அவர் தேவனை நோக்கி: உம்முடைய பிரசன்னம் எங்களோடுகூட வராதிருந்தால் நாங்கள் பிரயாணப்படுவதில் பிரயோஜனம் ஏதுமில்லை என்று கூறினார். ஆம், கர்த்தர் நம்மோடு இருப்பதே நமக்கு மேன்மைனயானது.

**யாத்திராகமம் 33:16**

**எனக்கும் உமது ஜனங்களுக்கும் உம்முடைய கண்களிலே கிருபை கிடைத்ததென்பது எதினால் அறியப்படும் நீர் எங்களோடே வருவதினால் அல்லவா?**

**ஜெபம்:** பரிசுத்தமுள்ள பிதாவே, நீர் இல்லாத வாழ்க்கை கருத்தற்றதும் பாலைவனம் போன்றதுமாயிருக்கும். உம்முடைய பிரசன்னம் எங்களோடே இருப்பதே எங்கள் மேன்மை என்பதை உணர்ந்து வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கசப்பான வாழ்க்கை மதுரமாகும்

நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்துவரும் நாட்களில், இஸ்ரவேல் தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று. அப்பொழுது யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரானாகிய எலிமெலேக்கு என்னும் ஒரு மனுஷன் தன் மனைவி நகோமியோடும், இரண்டு குமாரராகிய மக்லோன், கிலியோன் என்பவர்களோடும் மோவாப் என்னும் தேசத்திலே போய்ச் சஞ்சரித்தான். அந்த நகோமிக்கு பெரும் துன்பம் உண்டாயிற்று. அவளுடைய கணவனையும், இரண்டு குமாரர்களையும் அவள் இழந்து, தன் இரண்டு மருமக்களோடு வாழ்ந்து வந்தாள். இஸ்ரவேல் தேசத்திலே பஞ்சம் தீர்ந்து போனபின்பு, நகோமியும் அவளுடைய இளைய மருமகள் ரூத் என்பவளும் தேசத்திற்கு திரும் பினார்கள். ஊரார் அவளை வாழ்த்திய போது, அவள் மறுமொழியாக தன் வாழ்வு மிகுந்த கசப்பாக மாறிவிட்டது என்று கிலேசப்பட்டாள். கசப்பான நாட்கள் அவள் வாழ்க்கையில் ஏற்பட்டிருந்த போதும், ஏழு குமாரரைப் பார்க்கிலும் அருமையாயிருக்கிற ஒரு மருமகளை கர்த்தர் அவளுக்கு கொடுத்தார். ஏனெனில் அவள் வழியாக பெரும் ஆறுதலை நகோமியின் வாழ்க்கையிலே கர்த்தர் கட்டளையிட்டு, மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் சந்ததியானது அவள் மருமகள் வழியாக உண்டாகும்படி செய்தார். இந்தப் பூமியிலே இன்று சிலருடைய வாழ்க்கை வியாகுலம் நிறைந்ததாக இருக்கலாம். என் வாழ்நாட்கள் துன்பத்தில் கடந்து போயிற்றே என்று வருத்தப்படலாம். உங்கள் வேண்டுதல்களை கர்த்தருடைய சமுகத்தில் தெரியப்படுத்தி, பொறுமையோடு அவருடைய நேரத்திற்காக காத்திருங்கள். என் வாழ்வில் ஏற்பட்டிருக்கும் இந்த சூழ்நிலையிலிருந்து இனி எப்படி என் உள்ளத்தில் சமாதானம் வரமுடியும் என்ற நம்பிக்கையற்ற நிலை உங்கள் வாழ்வில் ஏற்பட்டிருக்கலாம்? எனக்கும் சமாதானத்திற்கும் வெகு தூரம். அது சாத்தியமற்ற செயல் என்று நீங்கள் எண்ணலாம். மனிதனுடைய பார்வையிலே சாத்தியமற்ற செயல்களை கர்த்தர் வாய்க்கப் பண்ணுகின்றவராயிருக்கின்றார். கர்த்தருடைய வழிகள் அதிசயமானவைகள். அவருடைய செயல்கள் மனிதனுடைய அறிவுக்கு அப்பாற்பட்டவைகள். சகலவித ஆறுதலின் தெய்வமாகிய கர்த்தர்மேல் பெலன்கொள்ளுகிற மனுஷர்கள் பாக்கியவான்கள். அவர்கள் அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொள்ளுகிறார்கள். அவர்கள் பலத்தின்மேல் பலம் அடைந்து, சீயோனிலே தேவசந்நிதியில் வந்து காணப்படுவார்கள். எனவே உங்கள் பாரத்தை கர்த்தர்மேல் வைத்துவிடுங்கள்.

**யோவான் 16:20**

**உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்.**

**ஜெபம்:** இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, நீரே என் சகாயர். பரம தந்தையே, உம்முடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. நீர் எனக்குச் செய்த நன்மைகள் யாவற்றிற்காகவும் உமக்கு நன்றி செலுத்துகின்றேன். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சகாயம் செய்யும் தேவன்

எலியா என்னும் தேவ ஊழியரின் நாட்களிலே மூன்று வருஷமும் ஆறுமாதமும் வானம் அடைபட்டு, தேசமெங்கும் மிகுந்த பஞ்சம் உண்டாயிருந்தது. அந்த நாட்களிலே ஆகாரத்திற்கு மட்டும் பஞ்சமல்ல, தேவனுக்கு பயந்து அவருடைய வார்த்தையின்படி வாழ்பவர்களை க்கூட காணமுடியாதபடி பஞ்சமுண்டாயிருந்தது. கர்த்தர் எலியாவை நோக்கி: நீ எழுந்து சாறிபாத்து என்னும் ஊருக்கு போ என்று கட்டளையிட்டார். அங்கே ஒரு விதவை விறகு பொறுக்கிக்கொண்டிருந்தாள் அவன் அவளைப் பார்த்துக் கூப்பிட்டு, நான் குடிக்கிறதற்குக் கொஞ்சம் தண்ணீர் ஒருபாத்திரத்திலும், அத்தோடு கொஞ்சம் அப்பமும் உன் கையிலே எனக்குக் கொண்டுவா என்றான். அதற்கு அவள்: பானையில் ஒரு பிடிமாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல், என்னிடத்தில் ஒரு அடையும் இல்லையென்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் இதோ, நானும் என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப்போக, அதை எனக்கும் அவனுக்கும் ஆயத்தப்படுத்துகிறதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்றாள். அப்பொழுது எலியா அவளைப் பார்த்து: பயப்படாதே. நீ போய் உன் வார்த்தையின்படி ஆயத்தப்படுத்து. ஆனாலும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டுவா. பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம். கர்த்தர் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடும் நாள் மட்டும் பானையின் மா செலவழிந்து போவதும் இல்லை. கலசத்தின் எண்ணெய் குறைந்துபோவதும் இல்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அவள் போய், எலியாவின் சொற்படி செய்தாள் அவளும், இவனும், அவள் வீட்டாரும் அநேகநாள் சாப்பிட்டார்கள். கர்த்தர் எலியாவைக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, பானையிலே மா செலவழிந்துபோகவும் இல்லை. கலசத்தில் எண்ணெய் குறைந்துபோகவும் இல்லை. பிரியமானவர்களே, இந்த உலகத்தின் சூழ்நிலைகள் எப்படியாகவும் இருக்கலாம். சிறுமைப்பட்டவர்கள்மேல் கண்ணோக்கமாயுள்ள தேவன், தம்மை நோக்கி பார்க்கின்றவர்களின் தேவைகள் என்ன என்பதை அறிந்திருக்கின்றார். அதை சந்திப்பதற்குரிய வழியையும் ஆயத்தப்படுத்தியிருக்கின்றார். அவர் பதிலளிக்கின்ற தேவன். திட மனதோடு காத்திருங்கள்.

**சங்கீதம் 10:14**

**நீர் பதிலளிப்பீர் ஏழையானவன் தன்னை உமக்கு ஒப்புவிக்கிறான் திக்கற்ற பிள்ளைகளுக்குச் சகாயர் நீரே.**

**ஜெபம்**: என் அலைச்சல்களை அறிந்த தேவரீரே, என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும் அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது. நான் கூப்பிடும் நாளிலே எனக்கு மறுஉத்தரவு அருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அன்பான வாசகர்களுக்கு!

## உங்கள் ‘**உள்ளான மனிதன்**’ பிரதியை பெற்றுக் கொள்ளுங்கள்

உள்ளான மனிதன் சஞ்சிகையை ஒரு சபையினூடாக பெற்றிருந்தால், தொடர்ந்தும் மாதாந்தர பிரதியை பெற்றுக்கொள்ள, அந்த சபையின் போதகரை தொடர்பு கொள்ளுங்கள். நீங்கள் வசிக்கும் இடத்தில் உள்ள சபையின் ஊடாக உள்ளான மனிதன் சஞ்சிகை விநியோகிக்கப்படாவிடில், அடுத்த பக்கத்திலுள்ள படிவத்தில் உங்கள் விபரங்களை பதிவு செய்து, இந்தியாவில் இந்த சஞ்சிகையை அச்சிட்டு வெளியிடுகிறவர்களின் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

மாதம் இந்த சஞ்சிகையை வாசித்த பின்பு மற்றய சகோதர சகோதரிகளுடனும் இதனை பகிர்ந்து கொள்ளுங்கள். இரட்சிப்பு தேவனிடத்திலிருந்து வரும்!

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்**. (யோவான் 3:16)

அந்த ஆச்சரியமான மாறாத தேவ அன்பு இன்றும் யாவரையும் இருளின் அதிகாரத்திலிருந்து ஆச்சரியமான தேவ ஒளிக்குள் வரும்படியாய் அழைக்கின்றது. ஆமென்!

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909 gtachurch.ca**

gtachurch.ca

உள்ளான மனிதன் மாதாந்த இலவச பிரதி

# விண்ணப்பப் படிவம்

**முழுப் பெயர் FULL NAME:**

________________________________________

________________________________________

**முகவரி ADDRESS:**

(தபால் உங்கள் இருப்பிடத்திற்கு வந்தடைய தேவையான முழு முகவரி விபவரங்களையும் குறிப்பிடவும்)

________________________________________

________________________________________

________________________________________

## மேலதிக விபரங்கள்

**whatsApp** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன் ☐

**Viber** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன் ☐

(**whatsApp Viber** வாயிலாக பெற விரும்பினால் உங்கள் கை தொலைபேசி இலக்கத்தைக் கீழே குறிப்பிடவும்)

**கை தொலைபேசி MOBILE PHONE:** ____________________

**மின் அஞ்சல் E-MAIL:**

________________________________________

**விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

**THE INNER MAN – GTAC**
**7700 MARKHAM ROAD**
**P. O. BOX 3052,**
**MARKHAM, ON L3S 4T1 - CANADA**

MAIL THE APPLICATION FORM TO THE ABOVE-MENTIONED ADDRESS

gtachurch.ca

gtachurch.ca